ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ. 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஹு மாசி மீ 26உ (9—3—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 41

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

### மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபாரிசு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

### சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது. 2

ஒரு சேர் டப்பி விலை ரூ. —8—0

### மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை, பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**
**தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி**

## ஆதி திராவிட மகாநாடு செந்துறை

மார்ச்சு-மீ இரண்டாவது வாரத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, தென்னாற்காடு, திருச்சிணுப்பள்ளி, சேலம், வடஆற்காடு ஜில்லாக்களின இரண்டாவது மகாநாடு மார்ச்சு-மீ கடைவோரத்தில கனம் எம். சி. ராஜா டெல்லியிலிருந்து வந்த பிறகு நடத்தப்படும். சகல பிரதிநிதிகளுக்கும், ஏழை ஜனங்களுக்கும் சாப்பாட்டிற்காக உதவிசெய்யும்படி உடையார்பாளையம் ஜமீன்தாரர் அவர்களைப பேட்டி காண ஏற்பாடு செய்யப்படுகிறது என்று விழுப்புரம் எம். சாமிநாதன் எழுதுகிறார்.

## மாஜி அமீர் அமானுல்லா.

சாதாரண பிரஜையாகவாவது ஆப்கானிஸ்தானத்திற்கு சென்று எனது சீர்திருத்தத்தைநிறைவேற்றுவேன். எதிரிகளின் சூட்சியையும் உலகமறியச் செய்வேன் என்று சொல்லுகிறார். இப்போது வீரர் கமால் பாஷாவுடன் தங்கி இருக்கிறார். அவருக்கு மைத்துனர் ஆகப்போகிறார்.


## தேவை

நன்கு வேலை செய்யக்கூடிய 8 முதல் 12 குதிரைப்பவர்(N H. B) வரையுள்ளதுமான ஸ்டிம் இஞ்சின் தேவை ஒன்றுசேர்ந்ததாகவும், வெவ்வேருகவும், பாயிலர் மட்டுமாகவோயிருக்கலாம். காரியஸ்தர்,

தீப்பெட்டி கம்பனி
பாலக்காடு (தென்மலபார்)

## மதன லீலா படங்கள்

64 வகை சிற்றின்ப ரகசியஉருவ ஒரிஜினல்போட்டோகிலேஸ் படங்கள் சதிபதிகளும் தனிமாதர்களும்கூடியது. அழகியஆல்பம் உள்பட விலை. 5—0—0

ஜே. ஜி. ஸ்டோர்,
வேப்பேரி, மதராஸ்

முந்துங்கள்! முந்துங்கள்!
வெந்தசரசம்

## ஞான சூரியன்

விலை
0—4—0 அணா
முன் பணம் அனுப்பினுல் 10-புஸ்தகத்திற்கு ஒரு புஸ்தகம் இனும்.

குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.


## மதிப்புரை

தென்னிந்திய தமிழ் அக்கடமியிருந்து நிகழும் 1930-வருஷத்திய பாக்கெட் டைரி ஒன்று வரப் பெற்றோம். இதன் முற்பகுதியில் இவ்வக்கடமையின் நோக்கங்களும் கொள்கைகளும் அவசியமும் விளக்கப்பட்டிருப்பதுடன் அதன் நிர்வாக உத்தியோகஸ்தர்களும் அதன் பல பிரிவுகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. பிற்பகுதியில் பொது ஜனங்களுக்கு பெரிதும் பயன்படுமாறு கவர்ன்மெண்ட் விடுமுறை நாட்கள் பற்பல இலாகா உத்தியோகஸ்தர்கள் தபால், தந்தி சமாச்சாரங்கள் வியாபார. கைத்தொழில் சமாச்சாரங்கள் முதலியனவும் தமிழ்ப் பிரசாரங்களும் நிறைந்துள. உட்புறம் ஒவ்வொரு பக்கத்திலும் ஆங்கில, தமிழ் நீதி நெறிகளும் பழமொழிகளும், குறள்வாக்கியங்களும் காணப்படுகின்றன. இது மாணவருக்கும் ஏனைய பொது ஜனங்களுக்கும் மிகஉபயோகமாயிருக்குமென்று நம்புகிறோம்.


## நோட்டீஸ்

1930-31-ம் வருஷத்திற்கு இந்த முனிசிபாலிட்டியின் டோல் கேட்டுகள், குப்பை குத்தகைகளை 1930-ம் வருஷம் மார்ச்சு மாதம் 12-ந் தேதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முனிசிபாலாபீசில் பகிரங்கமான ஏலத்தில் விடப்படும்.

நிபந்தனைகள் முதலான விபரங்களுக்கு 1930 வருஷம் பிப்ரவரி மாதம் ஜில்லா கெஜட்டு பிரசுரத்தை பார்க்கவும்.

முனிசிபல் ஆபீஸ், மதுரை
R. S. நாயுடு, சேர்மென்.
25—2—1930


பாலசாமி இயற்றியவை

## ஆனந்தக் களிப்பு

(வந்தே மாதரம்—மெட்டு)

1. விளங்கும் சுயமரியாதை— எங்கும்
வேற்றுமை போக்குமுன் னேற்றத்தின் பாதை.
2. சாதி மத வேறு பாடு—நம்
தாய்நாட்டைக் கேவலமாக்க ஏற்பாடு.
3. ஆதலினுலதை வெறுப்போம்—நாம்
அனைவரும் ஒன்றென்று கூடிவாழ்ந்திருப்போம்.
4. தீண்டாமை என்னும் பேயை ஓட்டி—நம்
தீண்டப்படாதவர் மீதன்பு காட்டி.
5. எல்லோரும் ஒன்றென்று கருதி—கூடி
இருந்து வாழ்ந்தால் சுய ராஜ்ஜியம் உறுதி
6. கடவுள் சொன்னுரென்ருல் வேதம்—என்ன
காரணம் மனிதரில் பலவித பேதம்.
7. சாத்திரம் மதம் இதிகாசம்—நம்மைத்
தாழ்த்துவ தாலே நம் பாதே ஆபாசம்.
8. ஆரியர் செய்ததோர் வேஷம்—இங்கு
ஆகையினுலே நீ போகாதே மோசம்
9. ஆராய்ந்து உண்மையைக் கண்டி—நாம்
அதன்படி நடப்பதினுல் பலனுண்டு.
10. வேற்றுமை புகுத்திடும் குறியே—நீ
விலக்கி அடிமைவிலங் ககற்றல் நன்னெறியே
11. மானிட வாழ்க்கையில் பிரிவு—இங்கு
வந்ததினுல் முன்னேற்றத்திற்குச்சரிவு
12. மதத்தினுலுண்டாகும் தீது—உலகில்
மனிதரால் சொல்லவென்ருல்முடியாது.
13. விபூதி நாமக்குறிச் சண்டை—நிஜ
வீண்கலகத்தினுல் உடைவது மண்டை.
14. அறிவுக்கொள்கை கொண்டபோது—கெட்ட
ஆரியர்கள் சூழ்ச்சி இனிப் பலிக்காது.
15. கல்லுக்குப பாலபிஷேகம்—செய்து
காசைக் கரியாக்கும் பேர்கள் அநேகம்.
16. செம்புக்குத் தேனபிஷேகம்—என்று
சிலர் செய்வார்கள் வீணுக அநேகம்
17. பார்ப்பனீயம் கீழே வீழ்க—என்றும்
பாமர மக்கள் முனனேறியே வாழ்க
18. வேற்றுமை விருட்சம் கீழ் வீழ்க—வைக்கம
வீரர் ராமசாமி நீடூழி வாழ்க.
விளங்கும் சுயமரியாதை—எங்கும்
வேற்றுமை போக்கு முன்னேற்றத்தின் பாதை.


பழநி சி. எம். சாமி,

## குரு [illegible]ம்பிர பஸ்பம்

இது அபூர்வ சக்தி வாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம்! சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்.

சி. மஹலயப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.

# சிவத்தையோ இலிங்கத்தையோ சுயமரியாதைச் சங்கம் பகைக்க வந்ததன்று

கைவல்யம்.

இந்து சமய சாஸ்திரங்களின் உண்மைகளை முறைப்படி கற்றுக்கேட்டு அறியாதவர்களென்று வெகுசுலபமாகச் சுயமரியாதைச் சங்கத்தை சொல்லி விடலாம். ஆனால் உலகப் பொதுவிதிக்கும், அறிவின் புத்திக்கும், சாஸ்திர உண்மைக்கும் அவசியத்திற்கும் சுயமரியாதை சங்கம்சொல்வது பொருந்த வில்லையென்று அறிவுடையவர்கள்சொல்லி விடமுடியாது.

கண்ணாடிக்கூண்டுக்குள்ளேதண்ணீர் விட்டு அதில் வளர்க்கப்பட்ட பொன்னிறமீன்கள் கண்ணாடியைத்தண்ணீர் என்று நினைத்து அதில்வந்துமோதிக் கொள்ளும். பிறகு அவற்றைபெரிய தொட்டியில்கொண்டுபோய்போட்டாலும்தண்ணீரைக் கண்ணாடி யென்று நினைத்துப்பயந்து பழய கூண்டில் எல்லைக்குள்ளேயேசுற்றும். அதுபோலநமது சமயவாதிகள் அவரவர்களுக்குப்பற்றுதலுடைய சில புராணங்களைக்கொண்டும் தாங்கள் பழக்கப்பட்ட சமய ஆசாரங்களின் கட்டுப்பாட்டைக் கொண்டும் மனம் குறுகிய களத்தில் நின்று வழக்கப்பட்டிருப்பதால் அதினின்று தலை தூக்கினால் தலை உடைந்து போமோ என்கிற பயம்அவர்கள் எலும்புக்குள் ஊறிக்கிடக்கின்றது. அதனாலே சுயமரியாதைச் சங்கத்தைக்கோபிக்கிறார்கள். தங்களையும்தங்கள் சமயத்தின் உண்மைகளையும் மறந்து பல பிரயோஜன மற்றவார்த்தையால் பிரசங்கமும் செய்கிறார்கள். அதற்குச் சமாதானம் சொன்னால் சிவ லிங்கத்தையும் சமயாசாரிகளையும் குற்றம் சொல்லுகிறார்கள் என்று விவகாரத்தின் உண்மையை அறிந்து கொள்ளாதவர்கள் சொல்லியும் விடுகிறார்கள். நாம் பிரயோஜனமற்ற பழக்க வழக்கங்களில் நுழையக்கற்றோம் மீளுவதைக்கற்கப் பயப்படுகிறோம். நாம் பிறவி முதல் அடிமையில் கட்டுப்படக்கற்று அவிழ்க்கக் கற்காமல் நமக்கு நேரிடும் சகல விபரீதங்களுக்கும் தலை குனிகிறோம் என்பதைநம்மில் அறிவாளிகளுணர்கிறார்கள்.

சிவம் என்றால் கடவுள். சந்தோஷம், நன்மை, முத்தி என்னும் அர்த்தத்தோடு கூடி எங்கும் நிறைந்த பொருளுக்குப்பெயர். சத்து, சித்து ஆனந்தம நிலைத்த இடமும் சிவமே. எக்காலத்தும் உள்ளபொருளாய் அழிவின்றின்றி எல்லாப் பொருள்களும் தன்னைப்பற்றாக உடையனவாய் உள்ளது எதுவோ அது சிவம். எப்பொருள் அறிவுமயமாகவிருந்து எல்லா உயிர்களுடைய அறிவை விளக்குமோ அது சிவம். எப்பொருள் எல்லா உயிர்களும் நுகர்கின்ற இன்பத்திற்கு இடமாய் நிற்குமோ அது சிவம். எல்லாப் பொருளும் எல்லா உயிரும் எல்லா இன்பமும் எல்லா நுகருமுணர்ச்சியும் சிவமே. குறி அல்லது அடையாளம் என்பது இலிங்கம். இந்த லிங்கத்தில் அந்தச் சிவனைக்காட்டும் குறிக்கு சிவ லிங்கமென்று பெயர்.

பஞ்சபூதங்கள், "சூரியன்" 'சந்திரன்' உயிர் ஆகிய எட்டுஉருவங்களை யுடையவன் சிவன். பஞ்சபூதங்களாகியஉலகம் சிவத்தின் உருவம். உலகமாகிய உருவம் சிவத்தைக்காட்டும் குறியாகவிருந்ததால் அது அண்டலிங்கமென்று கூறப்படுகிறது.

பஞ்சபூதங்களில் உயிர்களது உடலும் சிறிய உலகம். அந்த உடலும் சிவத்தைக்காட்டும் குறியாதலின் அது பிண்டலிங்கம். உடலிலிருக்கப்பட்ட உயிரும் சிவத்தினுடையஉருவங்களில் ஒன்றாதலால் அதுவும் சிவத்தைக்காட்டும் குறியாகின்றது அந்தஉயிர் ஆன்மலிங்கமென்னப்படும். சிவத்தினது அருள் விழங்கப்பெற்ற அடியார்கள் சங்கமலிங்க மெனப்படுவார்கள். இதனால் இவர்களைச் சிவத்தைப் போலவணங்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆத்மாவை விளக்கக் கூடிய தெளிந்த சுத்தமனத்தையும் சிவலிங்கமென்று சொல்லப்படும். முத்தியடைந்தவர்களிடம் விளங்கும் சிவ சக்தியை சதாசிவலிங்கமென்பார்கள். சிவன் கோவில்களில் மூலஸ்தானங்களில் நிறுவப்பட்டிருக்கும் சிவலிங்கத்தையும் சதாசிவலிங்கமென்பார்கள். இதனாலே தான் முத்தியடைந்தவர்களின் சமாதிதான்சிவன்கோவிலென்று சொல்லுவதற்குக காரணம். கோவில், கோபுரங்கள், விமானங்கள் முதலியவைகளிலிருக்கும் இலிங்கங்களுக்கும் ஆத்மார்த்த லிங்கங்களில் பல திற்கும் பெயர்களுண்டு. எங்கும்நிறைந்த சிவத்தைக் குறியீடாகக்காட்டும் சிவ லிங்கத்தைப் பூஜித்து அந்த சிவலிங்கம் ஊர்த்த முகமாய் நிற்பதால் பிரபஞ்சாதிகளுள் சூக்ஷமாக நிற்பது சத் என்பதையும் ஜ்யோதி ரூபத்தால் சித் என்பதையும் மேல்விபூதிதரித்து நிற்பதால் ஆனந்தமென்னும் ரூபத்தையும் ஒருங்கே உணர்ந்து இலிங்கத்தை உணர்ந்து மனதில் இதன் ஸ்வரூபத்தை ஒருவாறு அனுபவித்து விட்டால் நாமரூபாதிகத்தில் மண், பெண், பொன் இவைகளிலுள்ள ஆசை நழுவி மோக்ஷா பேக்ஷை வளரும். இதற்காகவே லிங்கத்தை பரம நிலையை உணர்த்தும் விக்கிரகமாக கோவில் மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதற்காகவே பஞ்ச பூதங்களுடன் ஸம்பந்தப்படுத்தி லிங்கம் ஐந்து வழிகளில் ஆராதிக்கப்பட்டும் வருகிறது. காஞ்சிபுரத்தில் பிருதிவியுடனும் திருவானைக்காவலில் அப்புவுடனும் திருவண்ணாமலையில் அக்கினியுடனும் ஸ்ரீகாளாஸ்திரியில்வாயுவுடனும் சிதம்பரத்தில் ஆகாயத்தினுடனும் பொருத்தப்பட்டு லிங்கம் ஆராதிக்கப்படுகிறது. பஞ்சபூதங்களை லிங்கமாகக் கொண்டு அதனுள்ளிருக்கும் பரம் பொருளை நியானித்து வந்தால்இவைகளாலாகிய பிரபஞ்சத்துள் முழுவதும் பரம்பொருளைக்கண்டு விடுபட மிகுந்த ஸகாயமாகவிருக்கும் என்பவைகளை சிவ லிங்கத்தைப்பற்றி சுயமரியாதை சங்கம் தெரிந்தவைகளாகும். இதில் அவர்களுக்குக் குற்றம் காணவென்னவிருக்கிறது. குற்றம் காண அவர்கள் சொரூப நிர்ணயம், தத்துவ விளக்கம், சமய நிச்சயம் செய்ய வந்தவர்களுமன்று. சுயமரியாதைக்காரர்கள் சைவ லிங்கத்தைப் பற்றி தெரிந்ததை விட சைவ பண்டிதர்கள் அதிகம் தெரிந்திருக்கலாம் உண்மைரகசியங்களை உணர்ந்து மிருக்கலாம்இதிலொன்றும் அவர்களுக்கு விவகாரங்களில்லை.

பொருளாகக் கண்ட பொருள்களுக்கெல்லாம் முதற்ப் பொருளாய் நிற்கும் தெய்வ சக்தியைக் குறியீடாக் காட்டும்சிவ லிங்கத்தைக்குற்றம்சொல்லசுயமரியாதைச்சங்கம் வந்ததல்ல. சிவலிங்கத்தின் சமதருமத்தைப் பிரகாசப்படுததவே வந்திருக்கிறதென்று பல தடவை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. சிவலிங்கத்தைப்பற்றி இந்து மதப்பிரிவினர்கள் போட்ட சண்டையால் தூஷணையை நிரப்பி பல புராணங்கள் அநேக காலத்திற்கு முன்னே எழுதப்பட்டும் பல பாட்டுகள் பக்திரசத்தால் பாடப்பட்டும் இருப்பவைகளுக்குச் சுயமரியாதைச் சங்கம் பொருப்பாளிகளல்ல வென்பதையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச முழுவதையும் பரம்பொருளாகக் குறிக்கும் சிவலிங்கத்தை நாமரூபம்நீங்குங்கால் இன்னதென்று நேரிடக்காட்டமுடியாத வஸ்துவை முடிவாகக்காட்டும்சிவலிங்கத்தை, சத், சித், ஆனந்தம் நாமரூபம் ஆகிய இவைகளுள் நாமரூபமாகிய மாயா லக்ஷணம் நீங்கிய பின்னர் சேஷிப்பது சச்சிதானந்தம் என்னும் பிரம லக்ஷணத்தைக் குறிக்கும் சிவலிங்கத்தை, நாமரூபங்கள் நீங்கிய நிலையில் முக்குணமடங்கி ஒன்றுபட்டு சாந்தம் பிரக்கும் என்பதை நினைப்பூட்டும் சிவலிங்கத்தை, ஆத்மகுணங்களாகிய சமம், விசாரம், சந்தோஷம்; சாது சங்கம் என்ற இவைகள் ஏற்பட்டால் அல்லாதுபரம்பொருளை சச்சிதானந்த அபிரூதியாக உணரமுடியாது என்னும் சைவசமய உண்மையிலுள்ள சிவலிங்கத்தை, சத்வ குணங்களாகிய சமம், விசாரம் சந்தோஷம், ஸாது சங்கமாகிய நான்கு ஆத்மகுணங்களையே உணர்த்தும் நந்தியான மோக்ஷ வாயில் காவற்காரனின் உத்தரவு கேட்டு தாண்டிக்கொண்டு தெரிசிக்கப் போகும் அந்த சிவலிங்கத்தை, நந்தியென்னும் அன்னாங்கு நிலையும் கிடைத்தபோதிலும் அவைகளோடு நின்று விடாமல் அவைகள் சென்றடையும் முடிவாகிய தன்னை சச்சிதானந்தமாக அனுபவிக்கும் நிலையை அவைகளுக்கு அப்பாற்காட்டும் சிவலிங்கத்தை இப்படிப்பட்டசிவலிங்கத்தினிடத்தும் மற்றும்வேறுஎந்த சிவலிங்கத்தினிடத்தும் குற்றம் கல்பிக்கும் வேலையைச் சுயமரியாதைக்காரர்கள் ஏற்றுக்கொள்ள வந்தவர்களன்று.

ஆனால் அவர்கள் சைவசமயவாதிகளிடம் என்ன கேட்கிறார்களென்றால் பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், உயிர் எட்டும் சேர்ந்த சிவ உடல் அண்டலிங்கம்; முத்தியடைந்தவர்களிடம் விளங்கும் சிவ சக்தி சதா சிவலிங்கம், பஞ்ச பூதங்களாகிய உயிர்களின் உடல் பிண்ட லிங்கம், உடம்பிலுள்ள உயிரும் சிவத்தைக்காட்டும் குறியாதலின் அந்த உயிர் ஆன்ம லிங்கம், இதுதான்சைவசமயஉண்மைகள். அப்படியிருக்கையில் அண்டலிங்கத்தண்டையும் சதாசிவலிங்கத் தண்டையும்பலபிண்டலிங்கத்தையும்அநேக ஆன்மலிங்கத்தையும் ஏன் போக விடுவதில்லை என்பதற்கு சைவசமயத்தின் தத்துவத்தால், அதில் காணும் உண்மையால், யுக்தி அறிவால் நமக்கேற்பட்டிருக்கும் அவசியத்தால் ஆலோசித்துப்பார்த்து அதற்கொரு முடிவு கட்டவேண்டுமென்றே தான் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

நமது சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களென்றும் ஒதுக்கப்பட்டவர்களென்றும் சொல்லப்படுகின்றவர்களின் தேகம் பிண்ட லிங்கமென்றும் அவர்கள் உயிர்கள் ஆன்ம லிங்கமென்றும் சிவலிங்க உண்மையில் சொல்லப்பட்டிருப்பதை சிவலிங்க உண்மையுணர்ந்தவர்கள் அறிவார்கள். பிண்ட லிங்கத்தையும் ஆன்ம லிங்கத்தையும் பிரித்தால் அண்ட லிங்கம் ஆறுக்கும் உதவாமல் இல்லாதொழியும். அவை சிவலிங்கத்தின் உண்மைக்கு ஒரு பெரும் குறைவல்லவா? சிவபெருமானின் பஞ்ச முகத்திலிருந்துண்டான வேத ஆகமங்களில் தாழ்த்தப்பட்டவர்களை அண்டலிங்கத்தினிடம் அணுகவிடப்படாதென்று சொல்லியிருந்தால் சிவபெருமானுக்கே அது இழுக்கல்லவா? தான் எப்பொருளிடத்தும் பற்றின்றி எல்லாப் பொருள்களும் தன்னைப்பற்றாக உடையனவாயுமுள்ள சிவத்தை மூலஸ்தானத்திலிருந்து அவ்வியக்த லிங்கமாகவும், சதாசிவ லிங்கமாகவும், காஞ்சிபுரத்தில் பிருதிவி லிங்கமாகவும், திருவானைக்காவலில் அப்பு லிங்கமாகவும், திருவண்ணாமலையில் ஜோதி லிங்கமாகவும், ஸ்ரீகாளாஸ்தியில் வாயு லிங்கமாகவும், சிதம்பரத்தில் ஆகாச லிங்கமாகவும் பொருந்தப்பட்டு பஞ்ச

[தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்]

# இந்து மதவீழ்ச்சிக்கும் இதரமத வளர்ச்சிக்கும் உதவிபுரிவது—பாழும்

## தீண்டாமையும்—விதவைகளின் துயரமுமே!

(திருச்சி மிஸ். நீலாவதி)

தீண்டாமை, ஆ! எத்துணை கொடியது, இதனினும் கொடியதுவேறொன்றுண்டோ? இல்லை; என் இல்லை? அம்மம்ம! உண்டு அது பின்னால்வரும். நிற்க, தீண்டாமை யென்னும் கொடும் பேயே நம் தேசத்தின் சீர் குலைவிற்குக்காரணமாகும். மதமே மக்களின் வேற்றுமைக்குக்காரணமாகும். மதம் மக்களுக்குள் ஒற்றுமையையும், சமத்துவத்தையும் சகோதர பாவனையையும் உண்டாக்குதல் வேண்டும். ஆதியில் மதம் அந்நோக்குடன் ஏற்பட்டிருந்தாலும் இக்காலையில் மதம் மக்களுக்குள் வேற்றுமையை உண்டாக்கி ஒற்றுமையைச்சிதைத்துப்பகுத்தறிவைப் பறக்கடிக்கச் செய்து அறியாமை யென்னும் அஞ்ஞான இருளைப்புகுத்தி மூட நம்பிக்கையில் மூழ்கச்செய்கின்றது செய்தும்விட்டது. இன்னும்செய்து வருகின்றது. ஓர் மதமோ ஓர் இயக்கமோ சிறந்தோங்கவேண்டுமானால் அதன் கொள்கைகள் சிறப்புடையவனவாயிருத்தல் வேண்டும். அன்றியும்அது ஒருமதமானது அதன் ஆரம்பத்தில் ஒருசமயம் அதன் கொள்கைகளும் தத்துவங்களும் அக்காலத்திற்கும் அந்நாட்டு நிலைக்கும் பொருத்தமானதாயிருந்திருந்தபோதிலும்இக்கால நிலைக்குத்தக்கவாறுஅவைகளை மாற்றியோ, புதுப்பித்தோ அமைத்துக்கொள்ளுதலே அறிவுடைமையாகும். அப்படிக்கில்லாமல் அதில்குறிப்பிட்ட ஒவ்வொன்றும் கடவுளால் சொல்லப்பட்டது என்றும் கடவுளவதாரர்களால் சொல்லப்பட்டது என்றும் சொல்லிக் கொண்டு "அதில் அணுவளவும் அசைக்கமுடியாது அது தேய்ந்து போனாலும் சரி அன்றி வளர்ந்து வந்தாலும் சரி அதற்காக நாம் உயிரை இழந்தாலும் காப்பாற்ற வேண்டும்" என்றுகூறுவார்களேயானால் அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் கவலை எடுப்பதில் பலனே இல்லை. அப்பேர்க்கொத்த மதத்தின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி நடக்கவும் மக்களால் இனி முடியாது. காலச்சக்கரம் சுழன்று வரும் வேகத்தில் மக்கள் மனம் அதற்கேற்றபடி மாறுதலடைவே செய்யும். நம் நாட்டில் மிகப்பழமையான மதம் என்பதும் மிகப்பலர் தழுவி நிற்பதென்பதும் நம் இந்துமதமே; இவ்விந்துமதத்தின் பெருமையை என்னால் சொல்ல முடியாது அதற்காதாரமான வேதங்கள் இதிகாசங்கள், புராணங்கள் இவைகளின் மகிமைகளோ எண்ணிறந்தனவாகும். "இந்து மதத்தை விடச்சிறந்தமதம் உலகில் வேருண்டோ" என்று இப்போதும்ஆத்திக அன்பர்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றனர். சுவாமி விவேகானந்தரும் வெகு சிரமப்பட்டு அமெரிக்கா சென்று இந்து மதத்தின் பெருமைகளை விளக்கிச் சொல்லி ஆங்கு இந்து மதத்தை நிலை நாட்டினார் என்றும் சொல்லப்படுகின்றது. ஆத்திக அன்பர்கள் ஆனந்த கூத்தாடுவதைப் பற்றியும் கவலையில்லை. சுவாமி விவேகானந்தரால் அமெரிக்கா வரையிலும் சென்று முட்டியதைப்பற்றியும் ஆட்சேபமில்லை. ஆனால் சுவாமி விவேகானந்தரால் அமெரிக்கா வரையிலும் சென்று செழித்த மதம் இப்போது அசைந்து ஆட்டங்கொடுத்து அழிந்து போகக்கூடிய நிலையிலும் ஒடுங்கி வளர்ச்சிகுன்றி ஒழிந்துபோகக்கூடிய நிலையிலும் இருப்பதைக்கண்டு தான் உள்ளம் சற்று உருகுகின்றது. அந்நிலைக்குக்காரணமாயிருக்கும் அநாசாரங்களை அதினின்றும் நீக்கி விடவே நாங்களும் ஆசைப்படுகின்றோம். அங்ஙனம் நீக்க முடியாதென்று முறட்டுப்பிடிவாதம் செய்வதாலேயே செய்துவருவதாலேயே அதை அழித்துவிடல் வேண்டுமென அஞ்சாமல் உரைக்கின்றோம். இந்து மதத்தைத் தழுவி நின்று நாங்களும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரைத் தீண்டாமை யென்னும் கொடுமையின் கீழ்ஆழ்த்திவருவதால் நாமடையும் லாபமென்ன? நம் மதம் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் குறைந்தும் மற்ற மதங்கள் எண்ணிக்கையில் வளர்ந்தும் வருவதுதானே நாமடையும் லாபம். இந்து மதக்கொடுமையின் கீழ் இருந்து வாழ சகிக்காமல் அந்நிய மதம் புகுந்த குடும்பங்கள் ஆயிரக்கணக்கிலென்றால் அது மிகையாகுமா? இப்பாழும் தீண்டாமையன்றோ இந்து மத வீழ்ச்சிக்கு இன்று உதவிபுரிவது தீண்டாதார் என்பவர் அந்நியமதம்புகுந்து விட்டால் அதன்முன் அவர்களைக் கொடுமைப்படுத்திவந்தகுணவான்களே அவர்களைக் கண்டதும் வணங்கி சலாம் போடுவதும் சகஜமாய்த்தானிருக்கின்றது. சின்னாட்களுக்குமுன் இந்து மதக் கொடுமை பிணின்றும் தப்புவிக்க நூற்றுக்கணக்கான மக்கள் முஸ்லீம் மதம் மாறியதை நேயர்கள் பத்திரிகை மூலம் பார்த்திருக்கக்கூடும். ஒன்று காலத்திற்கேற்றவாறு சீர்திருத்தவேண்டும் இல்லையேல் அதை அடியோடு அழித்து விடவேண்டும். முன்னையது புதுப்பிக்கும் சீர்திருத்த வேலை. பின்னையது, அழித்திடும் அழிவு வேலை. முன்வேலையில் முயன்று பார்த்து முடிவு கிடையா விட்டால் பின்வேலையைத் தொடங்க வேண்டியதே. இத்தீண்டாமைச்சட்டத்தின் கீழ் துயருரும் சமூகத்தார் சிறப்புற சிறந்த வழி அந்நிய மதம் சார்தலேயாகும். இங்ஙனம் அடிமை வாழ்வினால் அவதியுறும் வகுப்பார் வேறு மதம் புகுவதை ஆதரிப்பதைக்கண்டு சிலர் சீர்திருத்தக்காரர் மேல் சீறிவிழுகின்றார்கள். ஏதோ கல்வியறிவில்லாதவர்களானால் ஒருவாறு கவலை கொள்ளாமலிருக்கலாம். நாட்டின் நிலைமையை நன்குணர்ந்தவர்களும், இப்போது நடந்துவரும் உண்மை நிகழ்ச்சிகளை உள்ளவாறு உணர்ந்து அறிந்தவர்களும், கல்வியறிவு படைத்த கனவான்களுமானவர்களே அவ்விதம் சீறிவிழுந்தால் அப்புறம் அதைப்பற்றி அதிகம் விவரிக்கவே எனக்கு விருப்பமில்லை. எத்தனையோ அறிக்கைகள், எத்தனையோ எச்சரிக்கைகள், எவ்வளவோ பேச்சுகள், எண்ணிறந்த தீர்மானங்கள் இவைகளையெல்லாம் மேல் சாதியாரெனப் படுவோர் கேட்டும் கேட்காதவர்கள் போல் நடக்க, பார்த்தும் பார்க்காதவர்கள் போல் போக, ஒரு காதால் வாங்கி மற்றொருகாதால் வெளியிட்டு விட, கொடுமைப்படுத்தப்பட்ட குணசீலர்கள் இருந்திருந்து காத்திருந்து பார்த்து முடிவான அநுகூலம் ஒன்றும் முன்வராமற் போகவே இந்து மதத்தை வீழ்ச்சியுறச்செய்து அன்னிய மதத்திற்கு ஆயிரக்கணக்காய் அன்புடன் புகுந்து வருவதைக்கண்டும் உயர் சாதியாரெனப்படுவோர்க்கு இன்னும் புத்திவரவில்லையே. புத்திவந்து நம்மதத்தின்மேல்சுமத்தப்படும் பெரும்பழியை நீக்க முன்வருகிறார்களா? என்று தான் மீண்டும் கேட்கின்றேன். இந்து மதத்தின் வீழ்ச்சிக்குத் தீண்டாமையே காரணமென்பதை நன்குணர்ந்திருந்தும் இன்னும் அக்கொடும் பேயைப்போக்க இந்து மதக்காப்பாளர்களுக்கு சித்தந்திரும்பவில்லையே. நம்மதம் வளர்ச்சி குன்றுதே அன்னியர்மதம் ஆல்போல் தழைத்தோங்குதே என்பதை யுன்னி நாமே வலிய நம் சகோதரர்களுக்கு சம உரிமை வழங்கி ஆலய உரிமையை அளித்து அன்பால் தழுவி உண்மை நீதியை ஒப்புவித்தல்போக அவர்களே வந்து கேட்டும் தம் உரிமையை விட்டுக்கொடுக்கச் சொல்லியும் அல்லாது போனால்தாம் செல்லும் நிலையை அஞ்சாது எடுத்தெடுத்துச் சொல்லியும் இடித்திடித்துக் கூறியும் உயர்சாதி இந்துக்களெனக் கூறித்திரிவோர் இன்னும் தம் விடாப்பிடியைச் சற்றும் தளரவிட்டார்களல்லவே. இங்ஙனமிருந்தால் நம் இந்து மதம் செழிப்பது எங்கே? சிறப்பது எங்கே? இனி இந்து மதத்தின் வீழ்ச்சிக்குத் தீண்டாமை ஒன்றுமட்டும் காரணமல்ல. தீண்டாமையைவிட மிகக்கொடியதும் யான் முன் தீண்டாமையைவிட மிகக்கொடியது உண்டு அது பின்னால் வரும் என்று குறிப்பிட்டதுமான விதவைகளின் துயரமும் அவர்களின் இரத்தக் கண்ணீரும்மற்றொருகாரணமாகும். இந்துமதசோதரர்களே! உங்கள் சகோதரிகளிடத்து நீங்கள் காட்டும் கருணையை-ஜீவகாருண்யத்தன்மையை யான் எவ்வாறு புகல்வேன்? யான் எவ்விதம் பாராட்டுவேன்? தன் உணர்ச்சி அறியாப் பருவத்திலோ அன்றி அறிந்த பருவத்திலோ அன்றி அவ்வளவு கூட இல்லாமல் அன்னைமடிமீது துயில்கொள்ளும் பருவத்திலோ உற்றார் பெற்றார் உள்ளவர்கள் மூடத்தனமாய் ஓர் நிபந்தனையில் உட்புகுத்தி பின் ஓர் நூல் கயிற்றை இழக்க ஆயுட்கால முழுவதும் வதைக்கப்படுவதா? விதவைச்சட்டத்தின் கீழ் கொடுமைப்படுத்தப்படுவதா? அவ்விதவைச் சகோதரிகள் உலக சுகபோகங்களினின்றும் தாம் தள்ளிவிடப்பட்டதையுன்னி உள்ளம் உருகி சித்தங்கலங்கி நெஞ்சம் நெக்குவிட்டுப்புலம்பி, இருநேத்திரவழியாய் சொரியச்செய்யும் இரத்தச் சொட்டுகள் இந்து சமூகத்தையும் இந்து சகோதரர்களாகிய உங்களையும் பீடிக்காமல் போகுமா? இன்று நீங்கள் அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்திருப்பதின் ஆதிகாரணமென்ன? பெண்களைக் கொடுமைப்படுத்தி அடிமைகளாக்கி வேற்றுமைச சட்டத்தின் கீழ் வேதனைக்காளாக்கியதே! இந்து மதத்தில் பெண்களுக்கு எவ்விஷயத்திலேனும் சம உரிமை இருக்கின்றதா? இருக்கின்றதென்று துணிந்து சொல்ல முடியுமோ? வேறு எவராலும் முடியுமோ? கல்வி உரிமையும் இல்லை, கண்கள் உரிமையும் இல்லை, செல்வ உரிமையும் இல்லை, இன்பச் சுதந்திரமும் இல்லை. ஆ ஹா! இந்து மதப் பெண்களுக்களித்திட்ட உயர்வே உயர்வு. கல்வி கற்றால் பெண்கள் கள்ளக்காதலர்களை வரிப்பார்களாம், என்னே விந்தை? இஸ்லாம் மதத்தை எடுத்துக்கொண்டால் அதில் எவ்வளவு ஆண் பெண் சமத்துவ விசேடக்கொள்கைகள் அடங்கி இருக்கின்றன. ஆணுக்குள்ள உரிமைகள் அனைத்தும் பெண்ணுக்கு உண்டு ஆண் எப்படி பெண்ணை விரும்பவோ வெறுக்கவோ சுதந்திரம் இருக்கின்றதோ அத்தன்மைத்தே பெண்ணும் ஆணை விரும்பவும் வெறுக்கவும். அம்மதத்தில் சுதந்தரம் இருக்கின்றது. ஆனால் கோஷா முறை ஒன்றுமட்டும் இருந்தாலும் அதுவும் சிலவிடங்களில் இப்போது நீக்கப்பட்டு இனி முழுவதும் கூடிய சீக்கிரம் நீக்கப்பட்டு விடுமென்பது உறுதி. தீண்டாமைப் பேய்க்கும் அவ்வுத்தம மதத்தில் இடமில்லை. ஆகவே, தீண்டாமையால் கொடுமைப்படுத்தப்பட்ட சகோதரர்களும் விதவைத் தன்மையால் வேதனைக்காளாக்கப்பட்ட சகோதரிகளும் அவ்வன்னிய மதம் சார்தல் அவசியமாயிருக்கின்றது. "தட்டு திறக்கப்படும்" "கேழ்கொடுக்கப்படும்"! என்பதையுன்னி தட்டித் தட்டிப் பார்த்தும் திறக்கப்படவில்லை. கேட்டுக் கேட்டுப் பார்த்தும் கொடுக்கப்பட

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—உயுத்த காண்டம்

கட்டுரை—1

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

அனுமான் தான் இலங்கையில் செய்த செயல்களை விவரிக்கக்கேட்ட இராமன், "இவன் செய்த செயலை யார் செய்வார்? இவன் சீதையைக் கண்டுபிடிக்காவிட்டால்நான் பிழைக்க மாட்டேன். அதனால் என் கூடப் பிறந்தவர்களும் அயோத்தி மக்களும் வானரரும் அழிவர் இத்தனைபேருக்கும் இவன் உயிரைத்தந்தான். இவனுக்கு ஏற்ற உதவி செய்யவேண்டும். இவனை நான் மார்போடு அணைத்துக்கொள்ளுகிறேன். இவன் என்னுடைய அழகிய உடலிலேயே அதிக மயக்கம்வைத்திருக்கிறபடியால் இதையே இவனுக்குக்கொடுக்கிறேன். அமுதத்தை உண்கிறவனுக்குப் புல்லைக் கொடுத்தால பயனுகுமா? இதைத் தவிர வேறு பொருள்களை இவனுக்குக் கொடுத்தால் இதைக்கொடுக்கவில்லையே என்று வருத்தப்படுவான் இது இவனுக்கு மிகுந்த இன்பத்தை கொடுக்கும்." எனக் கூறி அவனை மார்போடு அணைத்துக்கொண்டான்.

இராமனுக்கு கடலைஎப்படித்தாண்டப்போகிறோம் என்றகவலை உண்டாயிற்று. அதனால் அவன் வாய்விட்டுப் புலம்பினான். சுக்கிரீவன் அவனைத்தேற்றினான். இராமன் அனுமானைநோக்கிஇலங்கையின் அமைப்பைப் பற்றிவிவரித்துச்சொல்லும்படிவேண்டினான். அனுமான் இலங்கையின் பெருமைகளையெல்லாம் விவரித்துரைத்து, "இராவணன் அரசர்களுக்குரிய சூதாட்டம் முதலிய குற்றங்கள் இல்லாதவன். எப்போதும் போரில் விருப்பமுடையவன். இலங்கையின் நடுவில் பல காவலர் உளர். அவர்கள் உயர்ந்த குலத்தில் பிறந்தவர்கள்; மிக நம்பிக்கையுள்ளவர்கள். நான் அகழ்களில் போடப்பட்ட பலகைகளை முறித்து அகழை நிரப்பி அவர்களை வென்று வந்தேன். விரைவில் நாம் புறப்படவேண்டும்" என்று கூறினான்.

இராமன் "நாம் இப்போதே புறப்படுவோம். இது நல்ல வேளை. நீலன் வழியைச்சோதித்துக்கொண்டு முன்னே செல்லட்டும்" என்றான. சுக்கிரீவன் அங்ஙனமே கட்டளையிட்டான். யாவரும் தெற்கே புறப்பட்டார்கள். மாருதி இராமனைச் சுமந்து சென்றான். வானர வீரர்கள் போகும்போது அடிக்கடி இராமனுக்கு முன் வந்து குதித்து அவனுடைய உடல் அழகைபபார்த்து அனுபவித்தார்கள்.

கடைசியாக அவர்கள் மகேந்திர மலையை அடைந்தார்கள். இராமன் அம்மலைமேல் ஏறி கடலைக்கண்டான். இராமனும் வானர சேனையும் கடலைக்கண்டு அதை எப்படி கடக்கப்போகிறோமென்று கவலைகொண்டு மனம் தளர்ந்தார்கள்.

இராமனுக்கு சீதையின் நினைவு வந்தது. அவன் இலக்குவனைப்பார்த்து, "சீதையை நான் எப்போது காணப்போகிறேன்.நான் அவளுடைய முகத்தை உயர்த்தூக்கி அவளுடைய அதரபானம் எப்போது செய்வேன்? பருத்து இடையில்லாமல் பனம்பழங்களைப்போன்ற அவளுடைய கொங்கைகள் எப்போது என் உடலில் படுமோ? என்று கூறிப் புலம்பினான். இலக்குவன் தன் அண்ணனைத் தேற்றினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் உடல் அழகன் என்றும் அதனாலேயே அவனிடத்தில் தசரதன் அனுமான் முதலிய பலர் ஈடுபட்டிருந்தனரென்றும், நாம் முன் பல இடங்களில் பல ஆதாரங்களைக்கொண்டு நிலைநாட்டி வந்தோம். இக்கட்டுரை வரலாற்றால் அது மிகவும் வலியடைகிறது. இராமன் அறிவாளியானதலின் இதனை உணர்ந்து அதற்குத்தக தன் காரியத்தைச் சாதிப்பதற்காக நடந்து கொண்டான் என்றும் கூறியிருந்தோம். இங்கே இராமன் அனுமானை நோக்கி நான் இவனை மார்போடு அணைத்துக்கொள்கிறேன. இவன் என்னுடைய அழகிய உடலிலேயே அதிக மயக்கம் வைத்திருக்கிறபடியால் இதையே இவனுக்குக்கொடுக்கிறேன். இதைத் தவிர வேறு பொருள்களை இவனுக்குக்கொடுத்தால் இதைக் கொடுக்க வில்லையே என்று வருத்தப்படுவான். இது இவனுக்கு மிகுந்த இன்பத்தைக்கொடுக்கும்" எனக் கூறி அவனை மார்போடு அணைத்துக்கொள்கிறான்.

இராமன் வானரச் சேனையோடு தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது வானர வீரர்கள் அடிக்கடி அவனிடம் ஓடி வந்து அவனுடைய அழகிய உடலைப் பார்த்துப பார்த்து மகிழ்ந்து குதித்தார்களாம் !!

அனுமான் இராமனிடம், இராவணன் சூதாட்டம் முதலிய தீய பழக்கங்கள் இல்லாமல நல்லொழுக்கமுடையவன் அவனுடைய சேனைத் தலைவரும் உண்மையல் உயர்குலத்தினர்" என்று கூறுகிறான். இதனால் இராவணன் பகைவரும் புகழும் நல்ல குணத்தினன்என்பது வெளிப்படை அனுமான் பொய்யன் என்பதற்கு. அவன் இராமனிடம் தான் இலங்கையின் அகழியைப் பலகைகளை நொறுக்கி நிரப்பி விட்டதாகக் கூறுவது ஒரு எடுத்துக் காட்டாம். இசசெய்தி இதன் முன் யாண்டும் கூறப்பெறுததே.

இராமன் தன்னுடைய தம்பியிடம் சீதை மேல் விரகதாபத்துடன்கூறும் மொழிகள் இயற்கைககு மாறாக உள்ளன. ஆனல் அக்காலத்தில் அவர்களுடைய ஒழுக்க முறை அப்படி இருந்தது போலும்!

கம்பர் இவ்வரலாறு முழுவதையும் சுந்தர காண்டத்திலேயே கூறி முடித்துவிட்டார் இதனை அங்கே கூறினோம். ஆனல் இக்கட்டுரையில் நாம் ஆராய்ந்த செய்திகளைக் கூறாமல் மறைத்துவிட்டார். இனி மேற் செல்லுதும்.

---

# பண்டிதர்களே எதை ஆராய்ச்சி செய்வது?

மைடான் டெல்லி

சுயமரியாதை வீரன் எழுதுவது.

தங்களை ஆஸ்திகர்களென்று சொல்லிக் கொண்டு ஊரார் உழைப்பில் உண்டுகளிக்கும் ஆண்மையற்ற பார்ப்பனர்களையும டிஷிதெண்டச்சோத்துக்காரர்களின்யெழுத்துக்களைதேவர்கள்வாக்கென்றுகருதிக் கொண்டு இன்னம்தெளிவுறாமல் பார்ப்பனவால்பிடித்துகூட்டோடுகைலாசம்போக வேணுமென்னும் மூடக் கொள்கையென்ற கடலில் மூழ்கி மகாதேவனை வழிபடும் சைவபண்டித குடுக்கைகளையும் கேழ்ப்பது என்னவென்றால் (பிர்மா) ஒரு ஆண் கடவுளல்லவா அந்தக் கடவுளுக்கு (வைதீகர்கள் கூற்றுப்படி பெண்டாட்டி உண்டே ஒழிய புழுக்ஷன் இல்லையே) அப்படியொத்த கடவுளுடைய முகததிலிருந்தும் தோளிலிருந்தும் துடையிலிருந்தும் பாதத்திலிருந்தும் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர யென நான்கு வருணத்தார்கள் பிறந்தார்களென்றால் பிரமமாவின் முகமும் தோழும் துடையும் காலும் எப்படி பிள்ளைகளை பெற்க முடியும்? அப்படியானால்பிரம்மாவின்சரீரத்தில் பிள்ளைகளைகர்ப்பம் உண்டாக்கினவர்கள்யார்?. என்று நாம்இவர்களைக் கேட்கிறோம் இப்படிப்பட்டஆபாசமான வேதத்தை நாம் நம்பாதபோனுலென்ன.

ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் பொருந்தாத முறையில் உலகம் ஒப்ப இயலாத முறையில் எழுதிவைத்திருந்தால் பழஞ்சைவம் பண்டிதக் கூட்டத்தார்கள் தவிர அறிவு படைத்த தற்கால ஏனையோர்கள் ஒப்புக்கொள்ள முடியாதென்பது திண்ணம்.

இந்த வியாசத்தில் சைவப் பண்டிதர்களை யேன் இழுக்க வேண்டி வந்ததென்றால்(யானை)தன்தலையில்தானே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வது போல் இவர்கள் தங்களை சற்சூத்திரன் அதாவது 1 லெ. சூத்திரன் என்று சொல்லிக் கொள்வதாலேயேதான்.' இப்படிப்பட்ட சைவர்கள் சுயமரியாதைக்காரர்களை புராண ஆராய்ச்சியில்லாத்அறிவிலிகளென்று அழகாய் தங்கள் பத்திரிகைகளில் யெழுதுகிறார்கள் [வெட்கமும்கெட்டு வெழிப்பட்ட மூழிக்கி முக்காடு யேதுக்கடி] யென்பது போல் தாய் நாடாகிய இந்தியா முதல் அன்னிய நாடாகிய இங்கிலாந்து சைனு, ஜப்பான் சிலோன் பர்மா மலாயா ஜாவா இன்னம் சில ஊர்க்காரர்களும் தினந்தோறும் பத்திரிகை வாயிலாக வெளிவரும் புராண ஆபாசத்தைக் கண்டு நகைக்கிறார்கள் இப்படி ஊர் சிரிக்கும் புராணங்களில். எந்த விஷயத்தை இந்த சைவப் பண்டிதர்கள் ஆராய்ச்சி பண்ணச் சொல்லுகிறார்களென்பதுயெமக்கு விளங்கவில்லை. அதாவது தனித்தனியே மனைவி இருந்தும் தாசியைப் போல ஒரு பெண்ணை ஐந்து பேர்கள் போகம் செய்த ஆபாச பாரதத்தை ஆராய்ச்சி பண்ணச்சொல்லுகிறார்களா? அல்லது பொழுது போக்குக்குக்கூட உபயோகமில்லாத ஆபாசக்கதையாகியராமாயணத்தை ஆராய்ச்சி பண்ணச் சொல்லுகிறார்களா? அல்லது இந்த புழுகு கந்தபுராணத்திலும் இல்லை என்று நம் நாட்டுச் சகோதரிகள் சொல்லிக் கொள்ளும் பழமொழிக்கிலக்கான கந்த புராணத்தை ஆராய்ச்சி பண்ணச் சொல்லுகிறார்களா அல்லது மிருகரூபத்திலும் சேராத மனித ரூபத்திலும் சேராத பிள்ளையார் புராணத்தை ஆராய்ச்சி பண்ண சொல்லுகிறார்களா அல்லது பிர்மாவின் அங்கத்திலிருந்தும் நான்கு வருணத்தார்கள் பிறந்தார்களென்ற (அதாவது பிர்ம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரகள் யென்று புரோகிதன் எழுதி வைத்திருக்கும் புளுகுக் களஞ்சியமாகிய இதிகாச வேத மனுதர்ம சாஸ்திர புராணங்களை ஆராய்ச்சி பண்ணச் சொல்லுகிறார்களா அல்லது நான்கு வருணத்தார்களில் இழுக்குப் பெறுகிற சூத்திரனென்ற பதவியிலிருந்து சற் சூத்திரன் யென்ற முதல் நம்பர் பதவியைக் கண்டுபிடித்துத் தங்களுக்குச் சூட்டிக்கொண்ட பெரிய புராணத்தை ஆராய்ச்சி பண்ணச்சொல்லுகிறார்களா மேல்கண்ட ஆபாசமான ஆராய்ச்சிகளில் சைவ பண்டிதர்கள் யெதை ஆராய்ச்சி பண்ணச் சொல்லுகிறார்களோ அதைச் சொன்னால் சிறிதும் மனச் சலிப்பின்றி ஆராய்ச்சி பண்ணி பார்க்க இன்றேநாம் தயார்.

# சபர்மதியும் ஈரோடும்

"நாடார்குலமித்திரன்"
3-3-30 தலையங்கம்

சபர்மதி வட இந்தியாவிலுள்ளது. அதன் தலைவர் மகாத்மா காந்தியாவர். ஈரோடு தென்னிந்தியாவிலுள்ளது. அதன் தலைவர் வைக்கம் வீரர் இராமசாமிப் பெரியாராவார். சபர்மதியில் சாத்வீகப் போர்த்தொண்டர் படை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஈரோட்டில் சமூகச் சீர்திருத்தத் தொண்டர் படை தயாராகிக் கொண்டிருக்கிறது, மகாத்மா வெள்ளைக்காரர்களிடமிருந்து இந்தியாவை மீட்கப் பார்க்கிறார். வைக்கம் வீரர் வைதீகக் கொள்ளைக் காரர்களிடமிருந்து இந்தியாவை மீட்கப் பார்க்கிறார். வருடம் ஒன்றுக்கு அறுபது கோடி ரூபாய் அன்னிய நாட்டுத் துணிக்காக நம் நாடு கொடுத்துவருவதைத் தடுத்துவிடலாமென்று சபர்மதி முயற்சிக்கிறது. வருடமொன்றுக்குத் தமிழ் நாட்டில் மட்டிலும் நாற்பது கோடி ரூபாய் சாமியின் பேராலும், சமயத்தின் பேராலும் செலவாகுங் கொடுமையைத் தடுத்துவிடலாமென்று ஈரோடு எண்ணுகிறது. இந்தியாவை இரக்கமின்றி நடத்தும் அதிகார வர்க்கத்துக்கு அடங்கி நடக்க முடியாதென்று மகாத்மா கர்ச்சிக்கிறார். பழைய பஞ்சாங்கத்துக்கும் தர்ப்பைப் புல்லுக்கும் பயந்து நடக்க முடியாதென்று வைக்க வீரர் மார் தட்டுகிறார். இந்தியாவில் முக்கால் வாசிப்பேர்கள் பட்டினி கிடந்து துடிப்பதைப் பாராமலும், பிரிவு காட்டாலும் இந்தியாவைச் சுரண்டுவதே தொழிலாகக் கொண்ட அன்னியரைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்று மகாத்மா பகர்கிறார். இந்தியாவில் எந்த ஸ்தாபனங்களிலும் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு ஏழைகள் ரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கும் கோயில் பூனைகளைக் கொல்லாமல் விடுவதில்லையென்று வீரர் விளம்புகிறார்.

சுயராஜ்யமின்றி மானமுள்ள இந்தியன் வாசிக்கலாமாவென்று சபர்மதி சாற்றுகிறது. சுயமரியாதை இல்லாதவனுக்கு சுயராஜ்யமேதற்கென்று ஈரோடு கேட்கிறது. சுயராஜ்யம் வந்து விட்டால் உள்நாட்டுச் சிக்கல்களை ஒரு நிமிடத்தில் தொலைத்துவிடலாமென்கிறார் மகாத்மா. சுயமரியாதை உண்டாய் விட்டால் சுயராஜ்யம் நம்முடைய சோபிக்குள் வந்து முட்டை போடுமென்கிறார் வைக்கம் வீரர்.

சபர்மதியில் சாத்வீகத் தொண்டர் படை தயாரிக்கும் சேனியாதிபதியும் ஈரோட்டில் சமூகசீர்திருத்தத்தொண்டர்படை தயாரிக்கும் சேனியாதிபதியும் நாய் குரைத்தாலும் ஓடி ஒழியும் பேடிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு சுத்த ரத்தமுள்ள வாலிபர்களே நமது படைக்குத் தேவையென்று கூறுகின்றார்கள்.

வெள்ளைக்காரர்களிடமிருந்து இந்தியாவை மீட்பதே கடமையென்று தம்படைகளுக்குக் கூறுகிறார் மகாத்மா. வைதிகக்கொள்ளைக்காரரிடமிருந்து இந்தியாவை மீட்பதே நமது கடமையென்று தம் படைகளுக்குக் கூறுகிறார் ஈ. வெ. ராமன். வருடமொன்றுக்கு அறுபது கோடி ரூபாய் அன்னியத்துணிகளுக்குக் கொடுப்பதைத் தடுத்துவிடலாமென்று மகாத்மா தைரியங்கூறுகிறார். வருடமொன்றுக்கு தமிழ்நாட்டில் மட்டும் நாற்பது கோடி ரூபாய் சாமியின் பேராலும், சமயத்தின் பேராலும் செலவாகுங் கொடுமையை ஒழித்து விடலாமென்று உற்சாகங்கொள்கிறார் வைக்கம் வீரர். நம்நாட்டுச் செல்வத்தையெல்லாம் இரக்கமின்றி சுரண்டிக்கொண்டுபோகும் அன்னியர்களை தாட்சணியமின்றி அப்புறப்படுத்தி விடுங்களென்று மகாத்மா தம் படைகளுக்கு அறிவித்துவிட்டார். அட்டைபோல் ஒட்டிக்கொண்டு ஏழைகள் ரத்தத்தைக் குடித்துக்கொண்டிருக்கும் கோயில் பூனைகளையெல்லாம் கொல்லுங்களென்று தம் படைகளுக்கு உத்தரவிட்டு விட்டார் வைக்கம் வீரர்.

இவ்விதமான இருபோராட்டங்களிலும் இப்போது இந்தியாவுக்கு எது அவசியமென்று அலசிப் பார்த்து ஒவ்வொரு இந்தியனும் தொண்டாற்ற வேண்டியது அவசியமாகத் தோணுகிறது.

அரசியல் சீர்திருத்தம் அவசியமா, சமூக சீர்திருத்தம் அவசியமாவென்று எண்ணிப்பார்த்தால் ஒவ்வொரு இந்தியனுக்கும் சமூக சீர் திருத்தமே அவசியமென்று தோன்றாமலிராது. காங்கிரசானது யோக விம்பர சபையாக இருந்த காலம்வரையும் அதற்கு மதிப்பே இல்லாமற் போய் சிறிது காலம் சமூக சீர்திருத்த சபையாக மகாத்மா காந்தியால் மாற்றப்பட்ட பிறகு தான் காங்கிரசாகவும் காணப்பட்டது காங்கிரசென்றால் இங்லாந்தும் நடுக்கமுற்றதாகக் காணப்பட்டது. பின்னால் சில சுயநலப்பிரியர்களால் காங்கிரஸ் சிக்குண்டு தீண்டாமை விலக்கு மதுவிலக்கு கிராம நிர்மாணத்திட்டம் முதலிய சமூக சீர்திருத்த திட்டங்களை நழுவ விட்டதினாலே தான் காங்கிரஸ் குற்றுயிராக ஒரு சிறு கூட்டத்தார்களுடைய உள்ளங்கையில் மறைந்து போய்க்கிடக்கிறது. புதைந்து போனது இனி பிரகாசிக்க வேண்டுமென்றால் சமூக சீர்திருத்தத்தினால் தான் ஆகவேண்டும். நாம் வேண்டுவதெல்லாம்-வேண்டித் தவங்கிடப்பதெல்லாம்யாருக்காக? சமூகத்துக் காகவே சமூகந்திருந்தப் பெறுதிருந்தால் யாது பிரயோசனம்? காங்கிரஸ், நாற்பது வருடங்களுக்கு மேலாகியும் சமூகத்தைக் கவனியாமல் போனதினால்தான் இன்றுகாணும் கேவலமான நிலைமையை அடைந்து விட்டது. மகாத்மா காந்தியும் சமூக சீர்திருத்த வாதியாக இல்லாமல் சமயம் போல் மழுப்பிக் கொண்டிருந்ததினாலே தான் இன்று அவருடைய சாத்வீகப் போரில் அவருடைய ஒற்றைக்குரலன்றி மற்றைக்குரல் சப்திக்கக் காணோம். ஆகவே மகாத்மாகாந்தி எடுத்துக் கொண்ட காரியம் முழுப் பிரயோசனமற்றதாகும். அவரே சாத்வீகப்போருக்கு ஜனங்கள் பக்குவமாகவில்லை சட்டமறுப்பிற்கும் தேசம் தயாராகவில்லை. வாலிபர்களுடைய வேகத்தால் நான் மறுக்க முடியவில்லையென்று சொல்லி விட்டார் ஒருக்கால் உப்போடையில் ஆரம்பித்த அவருடைய போர் வெற்றி பெற்றாலும் நமக்கு அவ்வளவு பிரயோஜனத்தைத் தராது. அதிகார வர்க்கமும் அரசியல் வாதிகளும் ஆடுகிற சூதாட்டத்தைக் கவனித்துக் கொண்டே வாளாவிருப்போமாகில் நாம் முழுதும் ஏமாந்தவர்களாய் விடுவோம் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை அதிகார வர்க்கம் ஜெயித்தாலும் சரி, அரசியல் வாதிகள் ஜெயித்தாலும் சரி, ஏழைமக்கள் கஷ்டம் தீருவது மகாகஷ்டம்தான்.

ஆகையால் இன்று உலகம் எது நன்று என்று கண்டு கூவுகின்றதோ அதையே நாமும் கைக்கொள்ளுவது நன்று நன்று இன்று உலகத்தில் ருஷ்யா ஜெர்மனி பிரான்சு இட்டலி, ஆஸ்டிரியா துருக்கி, அரபியா ஆப்கன் சைனா ஜப்பான் முதலிய முக்கால் உலகம் விரும்புவது யாது? சமூக சீர்திருத்தமேயாம் அனேக நாடுகள் மதத்தையும் சடங்கையும், மூடபழக்க வழக்கங்களையும் புதைத்து விட்டுப் பூரண வளர்ச்சியுள்ள சமூக ராஜீயமாகக் காணப் படுவதைக்கண்டு தான் வைக்கம் வீரர் சமூக சீர்திருத்தத் தொண்டாற்ற அழைக்கின்றார். அத்தொண்டே தேசத்தொண்டும் தெய்வத்தொண்டும் ஆகும். அத்தொண்டே உண்மைத் தொண்டுமாகும். ஏழைமக்கள் கள்ளைக்குடித்து கஷ்டத்தால் மானத்தை விற்று வயிறு வளர்க்கக் கப்பலேறிக் கஷ்டப்படுதல், தீண்டாதாரென்று திக்கற்றிருத்தல், தாசிகளென்று தயங்கியிருத்தல், சமபங்கின்றி அடிமையாயிருத்தல், சாமிகளென்று தரித்திரமாதல், சாத்திரக்கூத்து ருத்திரராதல், சிசுமணம் வேண்டல், கைம்மைமணம் கண்டித்தல் முதலிய கொடுமைகளையும் கூடா ஒழுக்கங்களையும் அறவே ஒழிக்க வேண்டுமென்று முயற்சிக்கும் ஈரோடு வீரருடைய சமூக சீர்திருத்தத்தொண்டாற்ற வேண்டியதே அவசியமென்று பன்னிப்பன்னிக் கூறுகின்றோம்.

நாடார் கு. மி

---

## மதிப்புரை

இங்கிலீஷ் ஸ்வபோதினி என்னும் மாத சஞ்சிகை ஆரணி திரு வி. என். ரங்கசாமி அய்யங்காரால் பதிப்பிக்கப்பட்டு வருவதின் இதழ் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அது ஆங்கிலம் கற்கக்கொள்ளுபவர்களின் அனுகூலத்திற்கு என்று பதிப்பிக்கப்பட்டு வருவதாய் தெரிகிறது. அதில் ஒவ்வொரு வார்த்தையும் முதலில் ஆங்கிலத்தில் எழுதி பிறகு அதையே தமிழ் எழுத்தில் எழுதி அடுத்தாப்போல் அதன் தமிழ் அர்த்தத்தையும் தமிழில் எழுதி வரப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் கற்றவர்களுக்கு அனுகூலமானது இதன் வருஷ சந்தா ரூ. 2—0—0

---

மகா-ள-ள-ஸ்ரீ ஈரோடு டி. மு. கோர்ட்டாரவர்கள் சமூகம்

1920 வரு ஸி. நெ. 1144

ராமச்சந்திர நாயுடு வாதி
சி. ஆர். கந்தசாமிபிள்ளை பிரதிவாதி

பாதது வரவு கணக்குப்படி பிரதிவாதியால் ரூ. 95-0-0 கிடைக்க தாவா செய்து மேற்படி தாவா 10-3-30 தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. மேற்படி வாய்தாவில் மேற்படி பிரதி வாதி நேரிலாவது, வக்கீல் மூலமாவது ஆஜராகி தன் எதிர்வாதத்தை தெரிவித்துக்கொள்ளாத பட்சம் மேற்படியாரை ஒரு கட்சி செய்து தீர்ப்பு பெறப்படும்.

சி. பி. ராகவேந்திர ராவ்
8--3--30 வாதி வக்கீல்

---

## ஈரோடு சுயமரியாதை மகா நாட்டு வசூல்

| | | |
|---|---|---|
| முன் வசூல் ... | ரூ. | 3000—0—0 |
| 13—3—30ல் கோவை திருவாளர்கள் | | |
| ராவ்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. | ரூ. | 250—0—0 |
| ராவ் பகதூர் டி. ஏ. ராமலிங்க செட்டியார் எம். எல். சி. ... | | 250—0—0 |
| வி. அருணசலம் செட்டியார் ... | ரூ. | 250—0—0 |
| எஸ். என். பொன்னையா கவுடர் ... | ரூ. | 250—0—0 |
| ஆக ரூபாய். | | 4000—0—0 |

11—3—30 முதல் 3, 4 நாட்கள் இந்த ஜில்லாவில் திருவாளர்கள் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், ராமசாமி, கண்ணப்பர், பழனிசாமி நாயுடு முதலியவர்கள் வசூலுக்கு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

# "சைவ பரிபாலனம்" பத்திரிகையின் 10 ம் ஆண்டு விழா

## திரு. கண்ணப்பரின் எதிர்பாராத வருகை — பல ஆயிரக்கணக்கான கூட்டம் குதூகலமான உணர்ச்சி

(நமது நிருபருடமிருந்து)

2-3-30 ஞாயிறு மாலை 3 மணிக்கு மேல் பொன்மலை சி. டைப்பை அடுத்துள்ள மேலக்கல் கண்டார் கோட்டை போர்டு பாடசாலையின் முன்னுள்ள மைதானத்தில் சிற்றுண்டிகள் அருந்திய பின் ஆயிரக்கணக்கான மக்களடங்கிய மிகப் பெருங்கூட்டமொன்று கூடியது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுள் பின் கண்டவர்கள் குறிப்பிடத் தக்கவர்களாகும். திருவாளர்களான ஈ. வெ. இராமசாமிப் பெரியார், கண்ணப்பர், வக்கீல்களான சோமசுந்தரம்பிள்ளை, இராமானுஜம், வேதாசலம் ஆகியவர்களும் ச. ம. பரமசிவம், கலியபெருமாள் நாயுடு வேணுகோபால் நாயுடு, விசுவநாதம், கி. கலியபெருமாள், திருமலைசாமி, இராவணதாஸ், முருகதாஸ், சு. பாலசுப்பிரமணியஉடையார் பொன்மலைரிட்டையர்டுபிட்டர் துரைசாமி பிள்ளை, டி. என். சுந்தரராஜுலு நாயுடு "தெய்வீகன்"? ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார், பூவாளூர் செல்வக்கணபதி செட்டியார், நகர் ஆரோக்கியசாமி உடையார், எஸ். ரெங்கசாமி, திருவாளர் சோலைமுத்துக்குமார பிள்ளை, அழகப் பிள்ளை, ரெங்கசாமி பிள்ளை, துரையூர் எஸ். இராமசாமி ஸ்ரீரெங்கம் காமாட்சியா பிள்ளை, எத்தாண்டார்பட்டி ரெத்தினம், உறையூர் நாகப்பனுர், சதாசிவம், திருச்சி திராவிடனை ஏஜண்டு மாசிலாமணி அகஸ்தியர் திரவியம் பிள்ளை, உள்ளூர் பிரபல மிராஸ்தார்களான, ஆ. அங்கமுத்து உடையார், தே. வையாபுரி உடையார், பொன்மலை வரதராஜுலு நாயுடு, எஸ். சீத்தாராம்மையர், சர்மா அய்யர் முதலியவர்கள் தலைவர்களைச் சுற்றி சூழ்ந்திருந்தார்கள்.

நாகைத் தோழர் கிருஷ்ணமூர்த்தியும், இராவணதாஸ் அவர்களும் சுயமரியாதைப் பாடல்கள் பாடி சபையை பெரிதும் கவரச் செய்தனர். 'தெய்வீகன்" ஆசிரியர் திரு. மே. வே. துரைசாமி உடையார் அவர்கள் விழாவைத திறந்துவைக்குமாறு திருமிகு ராமசாமிப்பெரியார் அவர்களைக் கேட்டுக்கொண்ட பொழுது "சைவ பரிபாலன" பத்திரிகையின் ஆண்டு விழாவிற்கு பெரியார் அவர்களே தனித்தகுதி உடையவர்களென்றும், சைவபரிபாலனம் என்பது அன்பை வளர்த்தல் என்ற பொருளால் வழங்கப்பட்டு வருகிறதென்றும் பத்திரிகை உலகத்திலேயே தலை சிறந்து தொழில் நடத்தி வெற்றி பெற்றவர்களுள் பெரியார் அவர்களே முதன்மையானவர்களென்றும், அவர்களுடைய உயரிய கொள்கைகளுள் சைவ பரிபாலனம் காரியாலயத்தார் அறிந்துகொள்ளவேண்டுவன சில உண்டென்றும், இவையனைத்தையும் உத்தேசித்து விழாவை பெரியாரவர்கள் திறந்து வைப்பதே சிறப்புடையதென்றும் கூறி விழாவைத்திறந்து வைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். நீண்ட கரகோஷங்களுக்கிடையே இராமசாமிப் பெரியாரவர்கள் எழுந்து சைவ பரிபாலனம் பத்திரிகையின் முன்பின் நிலைமைகளைப்பற்றியும், ஆசிரியருடைய உயர் குணங்களைப்பற்றியும், அப்பத்திரிகை நாட்டில் வளம்பெற்று நிலவவேண்டிய அவசியத்தைப்பற்றியும் வலியுறுத்திப்பேசிய பின்னர் பத்திரிகை நீடூழி சிறப்புற்றுத் திகழவேண்டுமென்றும் விரும்பி விழாவைத்திறந்து வைப்பதாகக்கூறி அமர்ந்தார்கள்.

திரு. விசுவநாதம் அவர்கள் கூட்டத்தின் தலைமையை ஏற்குமாறு வக்கீல் திரு. டி. வி. சோமசுந்தரம் பிள்ளை அவர்களைக்கேட்டுக்கொண்ட பொழுது தலைவர் தமிழ் பேசுவதில் நல்ல திறமை வாய்ந்தவரென்றும், ஆங்கிலத்தில் திருமிகு எ. இராமசாமி முதலியார் அவர்களைப்போன்று பேசும் நாவன்மை வாய்த்தவர்களென்றும், திருச்சி பிராமணரல்லாத வக்கீல்களுள் திறம்பட உழைக்கும் வழக்கறிஞரென்றும், அத்தகைய ஒரு பெரியார் இவ்விழாவுக்குத் தலைமை ஏற்கநேர்ந்தது இவ்விழாவின் பெரும்பாக்கியமென்றும் சொல்லித்தலைமை வகிக்குமாறு பிரரேபித்தார். இதனை திரு. மே. வே. துரைசாமி உடையார் அவர்கள் ஆமோதித்தார். அவருடைய அவைத்தலைமையை அனைவோரும் ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக மகிழ்ச்சிக் கரகோஷமான மங்கல ஒலி ஒலிக்க எழுந்து சுமார் அரைமணி நேரம் முன்னுரை மொழிந்தார்கள். இன்று ஒன்பது ஆண்டுகள் நிறையப்பெற்று பத்தாம் ஆண்டின் தொடக்கத்தை இப்பொழுது பெறுகிற சைவபரிபாலனம் பத்திரிகையின் இவ்விழாவிற்கு ராமசாமிப் பெரியார், கண்ணப்பர் ஆகியவர்களைப்போன்ற பெரியார்களை அழைத்து விழாவை நடத்திக்கொடுக்குமாறு செய்தது நாட்டிற்குவேண்டிய அவசியமான எல்லா சீர்திருத்தத்துறையிலும் உழைக்க முன்வந்துள்ள, (சரித்திரத்தில் எழுதிவைக்கும்படியான ஒப்பற்ற) பெரும்புகழைப் பெற்றமைக்குத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்குப்பத்திரிகைகள் மிக இன்றியமையாதன என்றும் அதற்கு உதாரணம் தமிழ் நாட்டில் "குடி அரசு" பத்திரிகை ஏற்பட்ட பிறகு தமிழ் நாடு அடைந்திருக்கும் முன்னேற்றமே சாட்சியென்றும் மற்ற நாடுகளின் நிலைமையை நோக்கினுலும் இது நன்கு புலப்படுமென்றும் உதாரணங்களோடு விளக்கிக்காட்டியதோடு "சைவ பரிபாலனம்" போன்ற பத்திரிகை இந்நாட்டுக்கு செய்யக்கூடிய நன்மைகள் அளவிடவே முடியாதனவென்றும், பத்திரிகை நன்கு பரவவேண்டுவதற்கு எல்லோரும் உதவிசெய்யவேண்டுமென்றும், அது நன்னிலை பெறுமாறு வாயார வாழ்த்துவதாயும் மக்கள் மனத்தைக் கவரும் வகையில் பேசித் திரு. கண்ணப்பர் அவர்களைச் "சூத்திரர் என்பவர் யார்" என்பதைப் பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் எல்லோரும் ஆச்சரியப்படும்படியாகவும், சூத்திரன் என்ற வார்த்தையே காதால் கேட்கவும் ஒப்பாதவாறு ஒரு புதிய ஆவேச உணர்ச்சியைத் தரும் படியாகவும் மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய காவியங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டியும் ஒரு நீண்ட சொல்மாரி பொழிந்தார். "இச்சொற்பொழிவு முழுதும் தனிக் கட்டுரையாக வெளிவரும்."

சுயமரியாதை என்பதைப் பற்றித் திரு. ராமசாமிப் பெரியார் அவர்களைப் பேசும் படி தலைவரவர்கள் கேட்டுக் கொண்டனர். பெரியாரவர்கள் எழுந்து சுயமரியாதை என்பதைப் பற்றியும் சிறப்பாகச் சடங்குகளின் வரலாறுகளைப்பற்றியும் மக்கள் ஆங்காங்கு குலுங்கக் குலுங்க நகைத்துக்கொண்டேயிருக்கும்படி இரண்டு மணி நேரம் வெகு நீண்ட சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தலைவரவர்கள் முடிவுரையாகப் பேசுகையில் திரு. கண்ணப்பர், திரு. பெரியார் ஆகியவர்களின் சொற்பொழிவை வலியுறுத்தி ஆதரித்தும், "சைவபரிபாலனம்" எவ்வெவ் வகையில் நாட்டுக்கு உழைக்கவேண்டுமோ அவ்வவ் வகையிலெல்லாம் மக்கள் அதற்குப் பேருதவி புரிந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் மக்களுக்கு மிக்க பேருணர்ச்சி உண்டாக்குமாறு பேசினுர்கள்.

முடிவில திரு விசுவநாதம் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப் பெற்று அனைவரும் மலர் மாலைகள் சூடப்பெற்றது. அதுகாலை விழா சிறப்புற நடத்துவதற்குப் பொருளால் உதவி புரிந்தவர்களாகிய மஞ்சத்திடல் திரு. குருசாமி ரெட்டியார், எத்தண்டார் பட்டி கண்டிராக்டர் திரு. குழந்தைவேல் எத்தண்டார் ஆகியவர்களுக்கும், உழைப்பால் உதவி புரிந்தவர்களாகிய திருவாளர்கள் துரைசாமி பிள்ளை, அண்ணாமலை உடையார், அ. கந்தசாமி உடையார் ஆ. வேலாயுத உடையார், சு. பாலசுப்பிரமணிய உடையார், ஐ. சுந்தர உடையார், நா. துரைசாமி உடையார் ஆகியவர்களுக்கும், போஜன இடவசதி செய்து கொடுத்தருளிய திரு. சு. சன்னுசி உடையார் அவர்களுக்கும் பொறுமையோடு காத்திருந்து விழாவைச் சிறப்பித்தருளிய யாவர்க்கும் வந்தனம் கூறப்பெற்று இரவு 8-30க்குக் கூட்டம் இனிது கலைஉற்றது. பின்னர் வெளியூர் வாசிகளுக்கு அறுசுவை உண்டி உண்பித்து ரயிலுக்கு அனுப்பி வைக்கப்பெற்றது. பெரியாரும் கண்ணப்பரும் கோயமுத்தூருக்குப் பிரயாணமானுர்கள்.

# "சுயமரியாதை" முழக்கம்.

## காவடி கட்டு வகைக்கு செலவாகும் ரூபாய் 500 லாபம்

எமது சமுதாயத்தில் வழக்கமாக வருஷந்தோறும் திருச்செந்தூர் மாசி மாத திருவிளாவிற்கு ரூ. 500 (ஐந்நூறு) செலவு செய்து இரண்டு மெம்பர்களைக்கொண்டு காவடி கட்டச்செய்து திருச்செந்தூருக்கு அனுப்பிவருவார்கள். இந்த வருஷமும் மேல்படி முறையை நடத்துவதற்றாக மானேஜர்களால் மெம்பர்களுக்குக் கூட்டம் கூடி ஆலோசிப்பதற்கு நோட்டீசுகள் அனுப்பப்பட்டு அதன்படி 25—6—125 வெள்ளிக் கிழமை பகல் 10 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. அதுசமயம் மெம்பரில் ஒருவரும் பிரபல வியாபாரியும் சுயமரியாதை நண்பருமாகிய திரு. அ. சரவணை அவர்கள் இந்த காவடிக் கட்டு என்கின்ற மூடத்தனமான செலவிற்காக நமது சமுதாய பொதுப் பணத்திலிருந்து இந்த முதல் செலவாகிறதானது மிகவும் வருந்தத் தக்கதென்றும் இது சமுதாயத்திற்கே பெரிதும் குறைவுபாடென்றும் கட்டாயமாக இத்தபிரயோசனமில்லாத மூட செய்கையை நிறுத்தவேண்டுமென்றும் ஓர் தீர்மானத்தை பிரரேபித்தார். திருவாளர்கள் எஸ். சண்முகம், ஆர். இராமலிங்கம், ஆ. இளையபெருமாள் முதலிய மெம்பர்கள் தீர்மானத்தை ஆதரிக்க அது நிறைவேறியது குறிப்பிடத் தக்கது. இந்த வருஷ முதல் அறிவு உலகம் இகழுமிந்த அர்த்த மற்ற காவடிக் கட்டை நிறுத்தப்பட்டதற்கு தீரமாக முன் வந்து (கடவுள் கடவுளென்று காசைத் தொலையாதே என்ற சுயமரியாதை மொழியை) செயம் பெறச்செய்த அன்பர்கள் திரு அ. சரவணை அவர்களுக்கும் அதற்கு ஆதரவளித்த தேவஸ்தான மானேஜரில் ஒருவராகிய திருவாளர் ந. சுப்ரமணியம் அவர்களுக்கும் எனது அன்பு மிக்க வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இவைபோன்ற மூடத்தனத்திற்கான செலவு இருப்பின் அவைகளையும் மாற்றி மக்களின் முன்னேற்றத்திற்கான கல்வி கைத்தொழில் போன்றவகைக்கு ஆதரவளிக்க முன் வருவார்களென்று நம்புகிறேன். இ. இராமசாமி கோட்டாறு

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 மார்ச்சு மீ 9-உ

# சென்னை அரசாங்க உள்நாட்டு மெம்பர் பதவி.

சென்னை அரசாங்க நிர்வாக சபையில் இம்மாதக்கடைசியில் ஒரு மெம்பர் ஸ்தானம் அதாவது கடந்த 5-வருஷ காலமாக டாக்டர் கனம் சர் மகமது உஸ்மான் அவர்கள் வகித்து வந்த உள்நாட்டு மெம்பர் ஸ்தானம் 5 வருஷ காலாவதியின் காரணமாக காலி ஆகக்கூடுமென்பதாய் தெரியவருகின்றது. அதை உத்தேசித்து அநேக கனவான்கள் அதை அடைய முயற்சி செய்துவருவதாகவும் தெரியவருகின்றது. அரசாங்கத்தாரும் அந்தப்பதவியை யாருக்குக்கொடுக்கலாம் என்பதாக யோசனை செய்து கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தாருக்கு இது விஷயமாக நாம் நமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட வேண்டியது நமது கடமை என்று நினைக்கின்றோம். ஆதியில் அதாவது சுமார் 20 வருஷத்திற்குமுன் மேன்மை தங்கிய கவர்னரவர்களின் நிர்வாக சபையில் இரண்டு அங்கத்தினர்கள் இருந்ததை மூன்றாக மாற்றியதின் முக்கிய காரணமே இந்தியர்களுக்கும் அதில் இடமிருக்கவேண்டும் என்கின்ற எண்ணமே யாகும். பிறகு மூன்றை நான்காக்கியதும் அவைகளில் இந்தியர்களில் ஜாதி மதப்பிரிவுக்குத்தக்கபடி தாராளமாய் பிரித்துக்கொடுக்க சவுகரியப்படுத்திக் கொண்டுவரப் பட்டது. அதன் காரணமாகவே சட்டமெம்பர் ஸ்தானத்தை பார்ப்பனர்களுக்கும் மற்றொன்றாகிய உள்நாட்டு மெம்பர் ஸ்தானத்தை ஒரு மகமதியருக்கும் கொடுத்து வரப்பட்டது. சென்ற வருஷத்தில் சட்டமெம்பர் ஸ்தானம் காலியாக நேரிட்டதும் அதை பார்ப்பனருக்கென்றே முடிவு காட்டிவிடக்கூடாதென்றும் மற்ற சமூகத்தாருக்கும் வரிசைக் கிரமமாய்மாறிவரவேண்டும் என்றும் வாதாடி அதை ஒரு பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டது. அது போலவே இப்போது 10-வருஷ காலமாய் மகமதிய கனவான்கள் பார்த்து வந்த ஸ்தானமும் காலியாவதால் அதை நிர்வாக சபையில் இதுவரை இருந்து வராத ஒரு சமூகத்திற்கே அதை இனி யோகிக்கவேண்டும் என்பதாக வலியுறுத்துகின்றோம். அதாவது நாம் அரசியலில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கேட்கும் போதெல்லாம் ஆதியில் இருந்தே இந்தியர்களில் 5 பிரிவுகளைத்தான் பிரித்துக்காட்டி கேட்டு வந்திருக்கின்றோம். அதாவது,

"இந்தியர்களுக்குள் என்றுகொடுபடும் பதவிகள் ஸ்தானங்கள் முதலியவைகளை இந்துக்கள் அதாவது இந்துக்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டவர்கள், மற்றும் மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் என்கின்ற ஐந்து பிரிவுகளாகப் பிரித்தே பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி வந்திருக்கின்றோம். அவற்றுள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரிவுகளைப்பற்றி இந்தசமயம் அவசியமில்லை என்று பார்ப்பனரல்லாதார் கட்சித்தலைவர்கள் சொல்வதானாலும் சென்ற வருஷம் சர். சி. பி. அய்யர் ஸ்தானம் காலியானதும் இந்த முறையைக் கொண்டேதான்வற்புறுத்திஅதை இதுவரை பார்ப்பாருக்கே கொடுக்கப்பட்டுவந்திருந்தாலும் அதை மாற்றி சர். கிருஷ்ணன் நாயர் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்தோம். அது போலவே இது சமயம் காலியான சர். மகமது உஸ்மான் அவர்கள் ஸ்தானமும் மகமதிய கனவான்களே பார்த்து வந்திருந்தாலும் இது வரை பார்த்திராத வகுப்பாரான தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கே கொடுக்கவேண்டியது நியாயமாயிருக்கின்றது என்று சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. ஏனெனில் இதுவரை அப்படிப்பட்ட பதவிகளை மற்ற வகுப்பார்கள் எல்லாம் அனுபவித்து வந்ததுடன் இன்றைய தினமும் அதுபோன்றசெல்வாக்கும் அதிக சம்பளமும் உள்ள உயர்ந்த பதவிகளில் எல்லாம் அவ்வகுப்பாரை (தாழ்த்தப்பட்ட வகுப்பாரை) தவிர மற்ற வகுப்பார்கள் எல்லாரும் இருந்து கொண்டு வருகின்றார்கள். எங்ஙனமெனில்,

ஒரு பார்ப்பனர் மந்திரியாகவும், மூன்று பார்ப்பனரல்லாதார்கள், அதாவது சட்ட மெம்பராக ஒரு பார்ப்பனரல்லாத மலையாள கனவானும், மந்திரியாக இரண்டு பார்ப்பனரல்லாத கனவானும், இருப்பதோடு மற்றும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஒரு மகமதியரும், ஒரு கிருஸ்தவரும் இருப்பதோடு எரக்குறைய இரண்டு வருஷகாலம் ஒரு கிருஸ்தவ கனவான் மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

ஆகவே தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பது ஒன்றைத் தவிர மற்ற வகுப்புகள்எல்லாம் "சீர்திருத்தத்தின்" பயனாய் ஏற்பட்ட ஒவ்வொரு பெரும் பதவிகளையும் அனுபவித்தே வந்திருக்கின்றார்கள். மற்றும் இந்து மத பரிபாலன போர்டிலும் இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாருமே அனுபவித்து வந்திருக்கிறார்களே ஒழிய இந்துக்கள் என்கின்ற தலைப்பின்கீழ் இருந்தும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு எவ்வித பிரதிநிதித்துவமும் பதவியும் இதுவரை கிடைத்ததாக யாரும் சொல்லமுடியாது என்றே நினைக்கின்றோம். ஆகையால் இந்த நிர்வாக சபை மெம்பர் பதவியை கண்டிப்பாய் அந்த அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்பவர்களுக்கே கொடுக்கவேண்டியது நியாயமும் யோக்கியமும் ஆன காரியம் என்பதே நமது அபிப்பிராயம்.

தாழ்த்தப்பட்டவகுப்பார் என்பது இந்தியாவிலாகட்டும் சென்னை மாகாணத்திலாகட்டும் ஒட்டுமொத்த ஜனத்தொகையில் சற்றேறக்குறைய 5ல் அல்லது 6ல் ஒரு பங்குள்ள ஜனத்தொகை கொண்ட சமூகமாகவும் வெகு காலமாகவே தாழ்த்தப்பட்டு வந்ததாகவும் மிக்க கொடுமையையும் கஷ்டத்தையும் அனுபவித்து வந்ததாகவும் இருப்பதுடன் இன்றைக்கும் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு இந்தியாவில் இருக்கவேகூடாது என்று யாராவது சொலலுவார்களேயானால் அதைமறுத்து கண்டிப்பாய் அந்தக் கவர்ண்மெண்டு இருந்துதானகவேண்டும் என்று சொல்லுவதற்குதகுந்த காரணஸ்தர்களாயுமிருக்கின்ற சமூகத்தார்களுமாவார்கள். ஏனெனில் அரசாங்கத்தார்கள் இந்தியாவில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்ட காலங்களிலெல்லாம் தாங்கள் இந்தியாவின் நன்மையைக் கோரியும் இந்திய மக்களில் இளைத்தவர்களை வலுத்தவர் துன்புறுத்தாமலும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர் என்பவர்களை கொடுமைப்படுத்தாமலும்இருப்பதற்காகவும் எல்லோரையும் சமமாகப் பார்ப்பதற்காகவும் இருப்பதாய்ச்சொல்லிக்கொண்டு இருப்பதை மெய்ப்பிக்கவும் சந்தர்ப்பத்தை கொடுக்கக்கூடிய சமூகத்தார்களாயிருப்பதேயாகும். அன்றியும்சைமன்கமீஷன்இந்தியாவுக்குவந்த காலத்தில் இந்தியர்களில் சிலர் அதை பகிஷ்கரித்ததற்கும் பலர் அதைவரவேற்கச்செய்ததற்கும்முக்கிய காரணஸ்தர்களுமாவார்கள். அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் முன்னேற்றமடைவதற்கும் சமத்துவம் அடைவதற்கும் பிரதிநிதித்துவம் பெருவதற்கும் இந்திய அரசியல் காரர்களின் சூட்சியிலகப்படாமல் இந்த அரசாங்கம் நியாயமாகவும் யோக்கியமாகவும் நடந்து கொள்ளுமென்றும்,மேலும்எந்தப்படி நடந்துகொள்ளசைமன்கமிஷன்வழி செய்யுமென்றும்நினைத்தே நம்பியே ஆதரித்தவர்களாவார்கள். அன்றியும் நாமும் நமது சுயமரியாதை இயக்கமும் இந்த தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டுதான் சைமன் கமீஷனை, உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் தங்கள் சுயநல எண்ணத்தைக்கொண்டு அதற்கு விரோதமாகச்செய்தகிளர்ச்சிகளின்சூட்சிகளை வெளியாக்கி அவைகளை அழித்து ஆதரித்ததுமாகும். அன்றியும் இன்றைய தினமும் பலருக்கு காங்கிரசினிடம் என் திரு காந்தியாரிடமும்கூட நம்பிக்கையில்லாமல் போனதும் காங்கிரசை விட்டும் திரு காந்தியின் சத்தியாக்கிரகம் பூரண சுயேச்சை ஆகிய சம்மந்தமான காரியங்களை விட்டும் விலகிக் கொண்டதற்கும் (சிலருக்கு ஜெயில் பயமாயிருந்தாலும் மற்ற பெரும்பான்மையோர்களுக்கு) இந்த சமூகத்தாரும் இவர்களின் முற்போக்கு விஷயத்தில கவர்மெண்டாரிடமுள்ள நம்பிக்கையுமாகும். ஆகவே சென்னை அரசாங்கத்தாரும் இந்திய அரசாங்கத்தாரும் இந்த நம்பிக்கைக்கு விரோதமோ துரோகமோ செய்யாமல் தங்களுக்கு கிடைத்த இந்த நல்ல சமயத்தை ஒழுங்காய் உபயோகித்துக் கொளவார்கள் என்று நினைக்கினறோம்.

தாழ்த்தபபட்டு கொடுமை செய்யப்பட்ட மக்களை விடுதலை செய்ய வேண்டுமானல அவர்களுக்கு அதிகாரங்களில் உயர் பதவி கொடுபபதன் மூலமே தான் சீக்கிரத்தில் செய்யக்கூடுமே தவிர வேறு காரியங்களாலல்ல. உதாரணமாக பார்ப்பனர்களால் மற்றப்பார்ப்பனரல்

லாதார்களை சூத்திரன் இழிந்த பிறப்பாளன் என்றும் மகமதியர்களை மிலேச்சர்களென்றும் கிருஸ்தவர்களை நீச்சர்களென்றும் சொல்லிக் கொண்டிருந்த கொடுமைகள் எல்லாம் இன்றையதினம் வேகமாய் மறைந்து மறைந்து போய்க் கொண்டிருப்பதற்கு காரணம் அந்தந்த சமூகங்கள் அரசியல் அதிகாரங்களில் ஆதிக்கம் பெற்றநிலேயே ஒழிய மற்றபடி வேறு எந்தக் காரணங்களாலவாதுஎன்று சொல்லிவிட முடியாது.

ஆகவே அரசாங்கத்தார் தங்கள் பொருப்புகளையும் நாணயங்களையும் காலதேச நிலைமையையும் உணர்ந்து கண்டிப்பாய் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கே இந்த பதவியை வழங்கவேண்டுமென்று மற்றுமொரு முறை வேண்டுகின்றோம்.

மற்றபடி அந்தச்சமூகத்தில் அந்தப் பதவியை வகிக்கத் தகுந்த கனவான்கள் இல்லை என்று ஏதாவது சாக்குச் சொல்ல வருவார்களே ஆனால் அதை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ளமுடியாது என்பதோடு அதில் சிறிதும் உண்மையும் நாணயமும் இருக்கமுடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் இன்றையதினம் சென்னை மாகாணத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின்பிரதிநிதியாக இந்திய சட்ட சபையில் இருக்கவும் சென்னை மாகாண மக்களின் பிரதிநிதியாக இந்தியர்வுககே அரசியல் பரீட்சை செய்தும் மேல்கொண்டு சீர்திருத்தம் வழங்கத் திட்டங்கள் ஏற்படுத்தும்சைமன் கமிஷன் கமிட்டியில் ஸ்தானம்வகித்துஇருக்கவும்மேற்படிசமூகத்தில் கனவான்கள்இருக்கும்போதுசென்னை அரசாங்கத்தில் அதுவும்சுமார் இரண்டொரு வருஷத்திற்குள் மறைந்து போக இருக்கும் ஒரு நிர்வாக சபையில் நால்வரில ஒருவராக இருக்கும் ஒரு மெம்பர் ஸ்தானத்திற்கு அந்த சமூகத்தில் நபர்கள் இல்லை என்று எப்படிச்சொல்ல முடியும் என்றுதான் கேழ்க்கின்றோம். அன்றியும் நாமாகவே உயர்திரு ராவ்பகதூர் எம். சி. ராஜா எம். எல், ஏ. அவர்கள் பெயரையும்ஞாபக மூட்டுகின்றோம். கடைசியாக அரசாங்கத்தார்இந்த விஷயத்தில் நியாயம் செய்யாமல் அலட்சியமாக இருந்துவிடுவார்களேயானால் சர்க்காரின் நல்ல எண்ணத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்குமஅவர்களிடம்அனுதாபமுள்ளவர்களுக்கும் சிறிதாவதுஉள்ளநம்பிக்கையும் ஆட்டம் கொடுத்துவிடு மென்பதையும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

# காங்கிரஸ்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் அதன் தலைவரும் சென்னையில் நடந்த காங்கிரசின் போது வரவேற்பு தலைவராய் இருந்தவரும் பார்ப்பனர்களின் தாசானுதாசராய் இருந்தவருமான திரு முத்துரங்க முதலியாரும் மற்றும் அதன் காரியதரிசியாய் இருந்த திரு கே பாஷ்யம் ஐயங்காரும்மற்றும் நிர்வாக அங்கத்தினர்களான திருவாளர்கள் எஸ். சத்திய மூர்த்தி சாஸ்திரி ஆர். சீனிவாசய்யங்கார் முதலியவாகள். நிர்வாக சபையில் ராஜீனுமா செய்துவிட்டார்கள் காங்கிரஸின் நிலைமையெங்குபார்த்தாலும்இதே சதியாகத்தான் இருந்துவருகின்றது.எனெனில் கொஞ்சகாலமாய் காங்கிரசில் இந்த மாதிரி ஆள்க்ள் தான் அதில் இருக்க முடிந்தது. அதாவது சட்டசபை மந்திரி முதலிய ஸ்தானங்களுக்கு அபேட்சை உள்ளவர்கள் மாத்திரம் அதில் இருக்கும்படி இருந்தது. இப்போது அதற்கு இடமில்லாமல் ஒரு சமயம் ஜெயிலுக்கும் போகும்படியான சந்தர்ப்பம் ஏற்படக்கூடும் என்று தெரிவதால் அப்படிப்பட்ட ஆள்கள் அதை விட்டு ஓடி வேறு கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக்கொண்டு வாழவேண்டியதாய்விட்டது. இதனாலேயே காங்கிரசை பார்ப்பனர்கள் வளர்த்து வந்த உத்தேசம் இன்னது என்பது நன்றாய் விளங்கும்.

நிற்க, இன்றையதினம் சென்னை மாகாணத்தில் காங்கிரசிலிருந்து ராஜீனுமா கொடுத்து ஓடுகின்ற ஆள்கள் எல்லாம் சென்னையில் காங்கிரஸ் கூடியபோது லாகூர் தீர்மானமாகிய பூரண சுயேச்சைதீர்மானத்தை வெகு வீரத்துடன் ஆதரித்த ஆசாமிகளாவார்கள். ஆனால் அத்தீர்மானம் லாகூரில் நிறைவேற்றி அதற்கு ஆரம்ப விழா நடத்தப்போவதாக பிரஸ்தாபம் வெளிப்பட்டவுடன் ராஜினுமா கொடுத்து ஓடி விட்டார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால் அதிகாரமுள்ளஎல்லாஸ்தாபனங்களையும் கைப்பற்றவேண்டும். என்பதேயாகும் எனவேஉத்தியோகமும் தேர்தல்ஸ்தாபனங்களை கைப்பற்றுவதுமேதான்இந்த பார்ப்பனர்களுடையவும்அவர்களது அடிமைகளுடையவும் தேசீய லட்சியம் என்பதையும்அதற்கு வழி இருந்தால்தான் பூரண சுயேச்சையில் கலந்திருப்பார்கள் என்பதையும் மற்றவர்கள் யாராவது அப்படிச் செய்தால் அவர்களை குலாம் என்றும் சர்க்கார் தாசர்கள் என்றும் சிறிதும் மானம் வெட்கம் இல்லாமல் எழுதுவார்கள் என்பதையும் ஒரு சமயம் ஜெயிலுக்கு போகவேண்டியதாயிருந்தால் இராஜினுமா கொடுத்து விட்டு ஓட்டம் பிடிப்பார்கள் என்பதையும் நாம் நம் வாசகர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

# பட்ஜட் என்னும் வரவு செலவு திட்டம்

சமீபத்தில் சென்னை சட்ட சபையில் நிகழப்போகும் பட்ஜட் வரவு செலவு திட்ட நடவடிக்கையில் மூன்று காரியம் செய்ய பணம் ஒதுக்கிவைக்கவேண்டும் என்னும் விஷயத்தில் கவலை எடுத்து அனுகூலப்படுத்திக்கொடுக்கவேண்டுமாய் சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அதாவது

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புஸ்தகம் துணி சாப்பாடு ஆகியவைகள் சர்க்கார் பணத்திலிருந்து செலவு செய்து கல்வி கற்றுக்கொடுப்பது.

2. மாகாணத்தில் சென்னையை விட்டு வெளியில் தமிழ் நாட்டில் ஒன்றும் ஆந்திர நாட்டில் ஒன்றுமாக விதவைகள் ஆச்சிரமம் வைத்து அவர்களுக்கு சௌகரியப்பட்ட பெற்றோர் உற்றோர்கள் இடமிருந்து செலவுக்கு தொகை பெற்றும் முடியாதவர்களானால் சர்க்காரிலிருந்தே செலவு செய்தும் சாப்பாடு துணி கொடுத்துக் கல்வியோ தொழிலோ கற்றுக் கொடுத்து ஜீவனத்திறகு வழியேற்படுத்திக் கொடுப்பது.

3. இப்போது மது விலக்குப் பிரசாரம் செய்வதும்போலவே சர்க்கார் செலவில் மாகாணமெங்கும் தீண்டாமை விலக்குப் பிரசாரம் செயவது. இம் மூன்று காரியங்களுக்கும் பணம் ஒதுக்கிவைக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகின்றோம்

ஆகவே சட்ட சபை அங்கத்தினர்களும் மந்திரிகளுமான கனவான்கள் இவ்விஷயங்களை கவனிப்பார்களாக.

# திருவாங்கூரின் அரசியல் அறிவு.

திருவாங்கூர் ராஜ்ஜியத்திற்கு வெளி நாட்டிலிருந்து வரும் உணவுப பொருளானது உள் நாட்டு உணவுப் பொருள்களைவிட [நெல் அரிசிகளைவிட] மிக்க சரசமாகக்கிடைப்பதால் உள்நாட்டு உணவுப்பொருள்களுக்கு விலை இல்லாமல் கஷ்டப் படுகிறார்களாம். ஆதலால் வெளி நாட்டு உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்க வேண்டுமாம். பார்ப்பான் ராஜ்ய பாரம் எப்படி இருக்கும் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும். வெளிநாட்டிலிருந்து உத்தியோகத்திற்கு ஆக இரக்குமதி செய்யப்படும் பார்ப்பார்கள் மீது வரி போடுவதற்கிலலாமல் அவர்களைத் தாராளமாய் இரக்குமதி செய்து சம்பளமும் கொடுத்து சாப்பாடும் போடுவதையும் நோகாமல் வெட்டிச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டும் வருணாசிரம தர்மம் பேசிக் கொண்டும் தெருவில் திரிவதையும் நிறுத்தவோ அல்லது அதன் மீது வரிப் போடுவதற்கோ இல்லாமலும் இருக்கும் நாட்டில் ஏழைகளுக்கு நயமாய் கிடைக்கும்படியாக வெளிநாட்டில் இருந்து வரும் அரிசி பருப்பு சாமான்களின் மீதுவரிபோடவேண்டுமாம். பேஷ் பேஷ் பார்ப்பன மந்திரியின் அரசியல் ஞானம் மெச்சத்தக்கதேயாகும்.

# தந்தி

சென்னை அரசாங்க நிர்வாக சபையில் சமீபத்தில் காலியாகக் கூடிய ஹோம் மெம்பர் (என்னும் உள்நாட்டு விஷய மந்திரி) ஸ்தானத்தை இந்தத் தடவை இம்மாகாணத்தில 70 லக்ஷம் ஜனத்தொகை கொண்டதாகிய ஒடுக்கப்பட்ட வகுபபு பிரதிநிதியாக ராவ்பகதூர் எம்.சி. ராஜாஎம். எல். ஏ. அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக திரு. ஈ. வெ. ராமசாமியார் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் வைசிராய் அவர்களுக்கும் தந்தி அடித்திருக்கிறார்.


# சைவ பரிபாலனம்

சைவ பரிபாலனத்திற்கு ஒன்பது ஆண்டுகள் நிறைவு பெற்று 10வது ஆண்டு துவக்க விழா கற்கண்டார் கோட்டையில் நடைபெற்று அப்பத்திரிகையானது சைவ பரிபாலனம் எனகின்ற பெயரை உடைத்தாயிருந்தாலும் கோட்டை கட்டிக்கொள்வதையும் சாம்பலடித்துக்கொள்வதையும் கொளவிக் கலலை நட்டுவைத்து கும்பிடுவதையும் பூசை உர்ச்சவம் செய்வதையும் அதற்கு விரோதமானவாகளைக் கழுவிலேற்றுவதும் வைவதுமான காரயங்களை சைவமென்று கொள்ளாமலும் மக்கள் யாவரையும் ஒன்றுபோல் மதித்து அன்பு செலுத்துவதையும் அறிவு பெருவதையும் முக்கிய சைவமாகக்கொண்டு நடத்தி வரப்படுகின்றது. இந்நிலையில் இது வளர்ந்தோ ஆசைப்படுகின்றோம். இதை ஆதரிக்கும்படி மக்களை வேண்டுகின்றோம்.

# பார்ப்பன பிரசாரம்.

இராமாயணம் என்னும் நூல் நமது சகோதரர்கள் அனைவரும் உள்பட திராவிடரை இழிவு படுத்தியும் ஆரியர்களையும் அவர்களது கொடுமைகளையும் புகழ்ந்தும் சுயநல வெறியர்களால் எழுதப்பட்ட நூல் என மக்கள் குடிஅரசில் வரும் இராமாயண ஆபாசத்தால் அறிந்திருக்கிற இக்காலத்தில் இவ்வூர் நாச்சியார் கோவில் தருமகர்த்தா திரு இ. ரா. கு. நல்ல குற்றாலம் பிள்ளை அவர்கள் இராமாயணம் பிரசங்கம் செய்வித்து வருவது தமிழ் மக்களால் மிகவும் வெட்கப்படத்தக்கது.

தர்மகர்த்தா அவர்கள் சுமார் 10 வருஷங்களாக நாஸ்திகர் என்று பெயர் வாங்கியவர்கள் இப்பொழுது தர்மகர்த்தாவானதும் ஆஸ்திகராகி விட்டது விந்தையிலும் விந்தையே. இனிமேலாவது தர்மகர்த்தா அவர் ஆரியருக்குஅடிமை செய்வதையும்சுயநலத்தையும் கொண்டு செய்யும்காரியங்களை ஒழிக்கும்படி எச்சரிக்கிறோம்.



சிரம்பானில் திரு. ஆறுமுகம் அவர்கள் வீட்டில் பொது ஜனங்களால் டீபார்ட்டி அளிக்கப்பட்டு புறப்படும்போது எடுத்த காக்ஷி.
மத்தியில் திரு. ராமசாமியார் அடுத்தாப்போல் திருவாளர்கள் ஆறுமுகம், டாக்டர். கிருஷ்ணசாமி ஜே. பி, எஸ். ராமநாதன்,
சிராவயல் காசிவிஸ்வநாதஞ் செட்டியார் முதலியவர்களும் மற்றும் அவ்வூர் பிரமுகர்கள் பலரும்.



## பினங்கில் நடந்த சுயமரியாதைத் திருமணக் காக்ஷி

உட்கார்ந்திருப்பவர்கள் திருவாளர்கள்கிருஷ்ணசாமி ஜே.பி.சாரங்கபாணி முன்னேற்றம் பத்திராதிபர்,சுவாமிஅற்புதாநந்தர்மணமகன்-மணமகள்பக்கத்தில்திரு.ஜானகி அம்மாள் சுந்தரராஜுலு திரு. சாரங்கபாணிக்கு பின்னால் காந்தி குல்லாப் போட்டு நிற்பவர் திரு. கே. சுப்பரமணியம் மணமகளுக்கு பின்னால் நிர்ப்பவர், திரு. அய்யாரு முன் வரிசையில் காந்தி குல்லாயுடன் உட்கார்ந்திருப்வர் ஜனுப் களஞ்சியம்

முதல் முதல் இந்த திருமணம் தான் பினங்கு இந்து சபையாருக்கு சுயமரியாதை சங்கத்தார் மீது விரோதத்தை உண்டாக்கியது.



## மூவரில் புறப்படும்போது எடுக்கப்பட்ட காக்ஷி

உட்கார்ந்திருப்பவர்கள் திருவாளர்கள் அய்யாரு, சாரங்கபாணி; சாமி சிதம்பரனுர், எஸ். ராமநாதன், ராமசாமி, நாகம்மாள், பொன்னம்பலனுர், நாச்சியப்ப செட்டியார், அருணசலம் பிள்ளை, திரு. ராமநாதனுக்கு இடப்புறம் நிற்பவர் நடராஜன் வலப்புறம் நிற்பவர் முனியப்ப செட்டியார். மற்றும் அநேக நகரத்தவர்களும் வியாபாரிகளும் அதில் இருக்கிறர்கள்.

## சித்திரபுத்திரன்

மகா விஷ்ணுவுக்கும் லட்சுமிக்கும் நடந்த சம்பாஷணை.

மகா விஷ்ணுவான ஸ்ரீரங்கம் ரங்கநாதர்:— அடீ என் அருமைக் காதலியாகிய லட்சுமி இந்த உலகத்திலும் மேல் உலகத்திலும் உள்ளவர்களுக்கெல்லாம் ஐசுவரியம் கொடுத்து வரும் செல்வ தெய்வமாகிய உன்னையே நான் மனைவியாய்க் கொண்டு இருந்தும் என்னையே நீ சாப்பாட்டிற்கே லாட்டரி சீட்டு போடும்படியாய் செய்து விட்டாயே இது யோக்கியமா?

லட்சுமியான ஸ்ரீரங்கநாயகி:— நாதா என்பேரில் என்ன தப்பு? நீங்கள் என் ஒருத்தியோடு மாத்திரம் இருந்தால் பரவாயில்லை. இன்னும் எத்தனையோ பேர்களை மனைவியாகக்கொண்டிருக்கிறீர்கள். இவர்கள் வாய் நீர் ஊன்றாய் செய்யும் தைரும் சாப்பிட்டதால் உமக்கு கொழுப்பு ஏறியதினால் தானே? உங்கள் பக்தர்களுடைய பெண்களையெல்லாம் கூட கைவைத்து விட்டீர் இப்படிப்பட்ட உங்களுக்கு சாப்பாட்டுக்கே லாட்டரி போடும்படியாக ஏன் செய்யக்கூடாது?

விஷ்ணு:— ஐய்யய்யோ அதனாலா இப்படி செய்துவிட்டாய்! நான் இதை ஒரு தப்பாக நினைக்கவே இல்லையே அப்படிசெய்வதும் ஒருலட்சுமி கடாக்ஷம் என்று தானே நினைத்திருந்தேன். உனக்கு கோபமாயிருந்தால் நாளைய தினமே அவர்களை யெல்லாம் விரட்டி அடித்து விடுகிறேன்.

லட்சுமி:— விளையாட்டுக்குச் சொன்னேன் கோபித்துக்கொள்ளாதீர்கள். இன்னம் எத்தனை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளுங்கள் எனக்கு அதைப்பற்றி கவலையில்லை.

விஷ்ணு:— பின்னையேன் லாட்டரி சீட்டு போட- செய்தாய்?

லட்சுமி:- வேறு சிலருக்கு அதாவது லாட்டரி சீட்டு போடுபவர்களுக்கு செல்வத்தை கொடுப்பதற்காக லாட்டரி சீட்டின் மூலமாய் செல்வத்தை சேர்ப்பதற்கு அப்படி செய்யச் சொன்னேன்.

விஷ்ணு;— அப்படியானால் அது எனக்கல்லவா அவமானமாய் இருக்கின்றது எங்கு பார்த்தாலும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் லாட்டரி சீட்டு - ரங்கநாதர் லாட்டரி சீட்டு என்று அல்லவா பணம் வசூல் செய்கின்றார்கள். இந்த அவமானத்தில் உனக்கும் பங்கில்லையா?

லட்சுமி:— அடேயப்பா இதில் தானா உமக்கு பெரிய அவமானம் வந்துவிட்டது? உங்கள் பேருக்கு உங்கள் முன்னால் பொட்டுகட்டி உங்கள் தாசியென்று பெயரும் செய்து கண்ட கண்ட பசங்கள் எல்லாம் கொளுத்துகிறார்களே அதிலில்லாத அவமானம் தானா உமக்கு லாட்டரி சீட்டில்வந்துவிட்டது? பக்தர்களின் பெண்களை தாங்கள் கைப்பற்றுவதும் தங்கள் தாசிகளை பக்தர்கள் அனுபவிப்பதும் தங்களுக்கும் பக்தர்களுக்கும் உள்ள பக்தித்துவமாகும்.

விஷ்ணு: அதெல்லாம் தான் இப்போது நமது உண்மை பக்தர்களாகிய சுயமரியாதைக்காரர்கள் தோன்றி சட்ட சபை மூலமும் குடி அரசு மூலமும் திருத்தி நமது மானத்தைக் காப்பாற்றி விட்டார்களே. இனி என்ன பயம். ஏதோசில கெடுடுகிண்டு இன்னம்கொஞ்ச நாளைக்கு இருக்கும் அப்புறம் நம்மபேரால் இந்த அவமானமான காரியமாகிய அக்கிரமங்கள் நடக்காது.

லட்சுமி:— அப்படியானால் அது போலவே இந்த காரியமும் (அதாவது லாட்டரி சீட்டு போட்டு நமக்கு சோறு போடும்காரியமும்) அவர்களாலேயே சீக்கிரம் நிறுத்தப்பட்டு விடும் கவலைப்படாதீர்கள்; இன்னம் கொஞ்ச நாளைக்குப் பொருந்துக் கொண்டிருந்தால் போதும்.

## வாலிப நாடார் ஐக்கிய சங்கம் பெருநாழி

இச்சங்கத்தின் வருஷோத்சவம் 23-2-30 பசுமலை நார்மல் ஸ்கூல் மானேஜர் கனம் சைத்தான் துரையவர்கள் தலைமையில் சங்கத்தின் முன்புறம் அமைக்கப் பெற்றிருந்த கொட்டகையில் கொண்டாடப்பட்டது. ஆரம்பத்தில் ஸ்ரீமான் மு. சு. வெள்ளையஞ்சாமி சங்கீதம் பாடினார் தி. எம் முருகேச பாண்டியன் அவர்களால் சங்கத்தைப்பற்றியும் பசுமலை கனம் மார்ட்டின டெய்லர் அவர்களால் வாலிப இயக்கத்தைப் பற்றியும் இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் போர்ட் அஸிஸ்டெண்ட் இஞ்ஜினீயர் கனம் லோகநாத முதலியார் அவர்களால் கிராமப் புனருத்தாரணம் பற்றியும் பசுமலை கனம் எப். எஸ். செல்சாமி அவர்களால் சுகாதாரம் பற்றியும் அழகிய உபந்நியாசங்கள் புரியப்பெற்றன.

என்று காரியதரிசிகள் எஸ். சுப்பிரமணியன் டி. அருணாசல பாண்டியன் எழுதுகிறார்.

## நோட்டீஸ்

கீழ்கண்ட விபரப்படி கும்பகோணம், பாபநாசம், தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி, தாலூகாக்களுக்குள் Evils of Drink and Benefits of Temperence மது பானத்தின் கெடுதியும், மதுவிலக்கின் நன்மையும் என்னும் தலைப்பின் கீழ் மிக நன்றாய் 10 பக்கத்திற்கு மேற்படாமல் வியாசம் எழுதி மேற்படி சேர்மன் அவர்களுக்கு 22—3—30க்குள் கிடைக்கும்படி அனுப்புவோர்களுக்கு மெடல்கள் கொடுக்கப்படும். மற்ற விபரங்கள் மேற் சொல்லிய தாலூகாக்களில் உள்ள உயர்தரப் பாடசாலைகளிலும் பெண் பாடசாலைகளிலும் கிடைக்கும்.

உயர்தர பாடசாலை ஆசிரியர்கள்—இங்கிலீஷ்—ஒரு தங்க மெடல்

பெண்பாடசாலை உபாத்தினிகள்—தமிழ்—ஒரு தங்க மெடல்

பொது ஜனங்கள் (ஆண்) இங்கிலீஷ் அல்லது தமிழ் ஒரு தங்க மெடல். ஒரு வெள்ளி மெடல்.

பொது ஜனங்கள் [பெண்] தமிழ் ஒரு தங்க மெடல் ஒரு வெள்ளி மெடல்.

எஸ். சுப்பிரமணியம்
காரியதரிசி.

ரூ.500 இனும் எப்படி?
விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.
மானேஜர், தபாற்பெட்டி 99 சென்னை.

## நோட்டீஸ்

கோயமுத்தூர் ஜனோபகார நிதிலிமிடெட் பாங்கியில் பங்குக்காரராயிருந்து சுமார் 6 மாதத்திற்குமுன் இறந்து போன கோயமுத்தூர் வெள்ளிங்கிரிகவுண்டர் குமாரத்தியும் சட்டியாக்கவுண்டர் மனைவியுமான மல்லாயம்மாளுக்கு இந்த நிதியில் 1500 ரூ. பொருமான முழுபங்குகள் இருக்கின்றன. ஷை மல்லாயம்மாளால் ஷை நிதிக்கு பங்கு பொருப்பு கடனில அசல் ரூ. 1300ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 146 ம் ஜாமீன் கடனில் அசல் பாக்கி ரூ. 700 ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 83 ம் வசூலாக வேண்டியிருக்கிறது. மேற்படி மல்லாயம்மாளின் வார்சுகள் நாளது தேதியிலிருந்து ஒரு மாதவாய்தாவுக்குள் தங்களுடைய வார்சு உரிமையை சரியானபடி ரூபித்துக்கொடுத்து மேற்கண்டபாக்கிகளைச்செலுத்தி பங்குகளை தங்கள் பேருக்குமாற்றிக்கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி முழுபங்குகளை 1930 ஞு ஏப்ரல் மீ 10 உ வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நிதியின் ஆபிசில் பகிரங்கமாய் ஏலம் போட்டு ஏலத்தில் வசூலாகும் தொகையை மேற்படி கடன்களுக்கு வஜாவைத்துக்கொண்டு மீதம் ஏதேனும் ஏற்பட்டால் அதை வார்சுதாரருக்கு கொடுக்கப்படும் அப்படி ஏலத்தில் வசூலான தொகை மேற்படி கடன்களுக்கு போதாமலிருந்தால்மேற்படி மல்லாயம்மாளின் இதர சொத்துக்களின் பேரில்தொடரப்படும்.

கோயமுத்தூர் 1930-ஞு மார்ச்சு 5 உ

C. G. நடராஜ முதலியார், செக்ரிடெரி.
கோயமுத்தூர் ஜனோபகார நிதி லிமிடெட்

திருப்பூர் கதர் & பனியன்ஸ.

உங்களுக்கு எது வேண்டும்!

கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!

எது வேண்டுமானாலும் அனுப்பலாம்

விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | | வெளி நாடு | |
|---|---|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு | 5-8-0 | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு | 6-8-0 |
| ,, அரை டஜன் | 2-14-0 | ,, 2 டஜன்கள் | 12-0-0 |
| ,, கால் டஜன் | 1-8-0 | ,, 3 டஜன்கள் | 17-8-0 |

வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும், வெளிநாடு ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபர ஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

M. V. Karuppanna Chettiar, *Khaddar Merchant*, TIRUPUR. (S. India.)

## ஓர் வேண்டுகோள்

இவ்வாண்டு நம் 2-வது சுயமரியாதை மகாநாடு ஈரோட்டில் மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் கூடப் போகிறது வாலிப சிங்கங்களே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? வாய்ப்பேச்சில் காலங்கடத்த இது சமயமன்று [ஜெனரல் எலெக்ஷன்] சட்டசபைத் தேர்தல்கள் அணித்தே வருகின்றன இப்பொழுதிருந்தே அதற்கு அஸ்திவாரம் போடவேண்டாமா? வேலை செய்ய வேண்டாமா? எல்லா சட்டசபை ஸ்தானங்களையும் ஒரேயடியாக நமது கொள்கையாளர்களைக் கைப்பற்றச்செய்து சுயமரியாதைத் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்கவேண்டாமா? சென்ற 4, 5, ஆண்டுகளாக சுயமரியாதை விதையை வைக்கம் வீரர் இராமசாமிப் பெரியார் தமிழ் நாடெங்கணும்விதைத்து முளையாய்-செடியாய்-கொடியாய் பூவாய்-பழமாய் பலனளித்துவரும் இக்காலத்திலும் என்? நம் இந்தியாவெங்கும் பலனளித்து வரும் இக்காலத்திலும்உலகெங்கும் பலனளித்து வருமிக்காலத்தில் இன்னுமா சட்டசபைகளில் சனாதனப் பார்ப்பனர்களை வைக்கின்றீர்கள் வெட்கம்-வெட்கம். வாலிபர்களே எழுங்கள்! எழுங்கள்!! ஈரோட்டிற்குச்செல்லுங்கள்!!! விரைந்து செல்லுங்கள் சென்று கூடி சுயமரியாதை உணர்ச்சியை மூலை முடுக்குகளிலெல்லாம் விதைக்க வகை தேடுங்கள். ஆண் பெண் அடங்கலும் சிறப்பாக முந்துங்கள் என்று அத்திபாளையம் கே. கோவிந்தசாமி எழுதுகிறார்.

## மதிப்புரை

பாரதி:— உத்தமபாளையத்தினின்றும் வெளியிடப்படும் பாரதிபத்திரிகையின் இரண்டாவது ஆண்டு முதல் இதழ் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திருவாளர் ரா. நாராயணசாமி அவர்களாகும். அவர் ஊக்கமும், உற்சாகமும் எழுர்ச்சியும் கொண்டவர் மேற்படி இதழில் சுவைநிறைந்த கட்டுரைகளும், அறிஞர்களால் வரையப்பட்ட வியாசங்களும் பெண்மணிகளது ஜீவிய சரித்திரமும், பிரபலஇந்தியதலைவர்களது படங்களும் நிறைந்திருக்கின்றன. கொள்கையில இது சமயம் சிறிது மயக்க முடையதாயும் பழங்கொள்கைகள் கொண்டதாயும் காணபபட்டாலும் ஒரு காலத்தில் அது அறிவு இயக்க கொள்கைகளில் கலந்து உழைக்கும் என்ற பூரண நம்பிக்கை நமக்கு உண்டு. இத்தகைய சிறந்த பத்ரிகையைஆதரிக்க வேண்டியது தமிழரது இன்றியமையாக்கடனாகும்.

## கொ. லட்சுமிபுரம்

ஸ்ரீ மீனாட்சி சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவுவிழா நிகழும் சுக்கில ஆண்டு மாசித்திங்கள் 27 ம் நாள் (10-3-30) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி முதல் இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு திருவாளர் W. P. A. சௌந்தர பாண்டியன் M. L. C. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## சென்னிமலை வாரச் சந்தைப்பேட்டை ஏல நோட்டீஸ்

1930 வருஷம் மார்ச்சு மாதம் 14ந் உ வெள்ளிக்கிழமை மாலை 2-மணிக்குச் சென்னிமலை வாரச் சந்தைப்பேட்டையை, சென்னிமலை யூனியன் போர்டாபீசில் நாளது 1930-31 வருஷத்துக்கு ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகளை யூனியன் போர்டாபீசில் பார்த்துக்கொள்ளலாம்.

மு. பழனியப்ப முதலியார்,
பிரசிடெண்டு.

## மேல் நாட்டு "தெய்வீசம்"

சென்ற மாதம் 25ந் தேதியில் லண்டன் பட்டணத்திற்கு 1300 மைலுக்கு அப்பால் சமுத்திரத்தின் நடுவில் மணிக்கு 20 மைலுக்கு மேல்பட்ட வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு கப்பலில் பாடப்பட்ட பாட்டுகளானது அதே சமயத்தில் லண்டன்நகரில் உள்ள பல பாகங்களிலும் ஜனங்கள் கேட்டுஆனந்தமடைந்தார்களாம்.

## சுயமரியாதைக் கீதம்

திருவாளர்கள் ஜே. யம். பாலையா ஐ. அல்போன்ஸ் ஆகியவர்களால் பாடப்பட்டு சாத்தூர் இளைஞர் சுயமரியாதை சங்கக்காரியதரிசி திரு. பா. சண்முகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட சுயமரியாதைக் கீதம் என்ற புஸ்தகம் ஒன்று வறப்பெற்றோம். இது 10 பாட்டுகளும், 12பக்கங்களும் கொண்டது.

இதன் விலை அணா. 1.

கிடைக்குமிடம் காரியதரிசி இளைஞர் சுயமரியாதை சங்கம் சாத்தூர்.


# ஞானசூரியன்.

மக்கள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபடவேண்டுமானால், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால், இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள—கடவுளாலும், கடவுளைக் கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்பால் அடிமை, கடவுள் பெயரைச்சொல்லிப் பணம்பறிக்க ஏற்பட்ட பார்ப்பனக் கோட்டைகளாகிய கோயில்கள், பார்ப்பன ஆதிக்கமும் செல்வாக்கும் குறையாதிருக்க ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள், இருப்பார்க்கு புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதாயும், இறந்தார்க்கு மோட்சத்திற்கு நேர்வழி காட்டுவதாயும் ஏய்த்து, வயிர் வளர்க்க கையாளப்பெறும் புரோகிதம், முதலியவைகளின் ஆபாசங்களை மக்கள் உணரவேண்டும். உணர்வார்களானால் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு, மூடநம்பிக்கையிலிருந்தும், மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் தாங்களாகவே கரையேறுவார்கள்.

இவ்வுணர்ச்சியை மக்கட்கு உண்டாக்கும் பொருட்டே மூடிமூடி வைக்கப்பட்ட கடவுள் வரமெனப்படும் நூற்களின் ஆபாசங்களை நன்கு ஆராய்ந்த நுண்ணறிவாளர்களது துணைகொண்டு பல அறிவு விளக்க நூற்களாக மிகக் குறைந்த விலைக்கு வெளியிடக் கருதி—"குடி அரசு பதிப்பகம்" என்னும் பெயரால் ஒரு வெளியீட்டுக்கழகம் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக "ஞான சூரியன்" என்னும் அரும்பெரும் நூலை 2000 காபிகள் அச்சிட்டு, அதன் முன் விலையின் பாதி விலையாகிய 0—8—0க்குக் கொடுத்தோம் சென்ற ஏழெட்டு மாதங்களுக்குள் அவ்வளவு பிரதிகளும் செலவாய் விட்டமையால் தமிழ்நாட்டில் அப்புத்தகத்திற்குள்ள மதிப்பை உணர்ந்து பொருள் நிலை இடந்தராத ஏழைகளும் வாங்கிப்படித்து பயனடையுமாறு 4000 பிரதிகள் அச்சிட்டு 0—4—0 விலைக்குத்தர முன் வந்துள்ளோம்.

செல்வம் படைத்த சீமான்களும் நமது இயக்கத்தில் நோக்க முள்ள அன்பர்களும் நூற்றுக்கணக்காக இப்புத்தகத்தை வாங்கி ஏழைகளுக்கும் மாணவர்களுக்கும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

பிரதி 1-க்கு விலை 0—4—0

தபால் செலவு வேறு.

## இராமாயணத்தின் ஆபாசம் 0—4—0.

முன்பணத்துடன் வரும் 10 புஸ்தக ஆர்டர்க்கு ஒரு புஸ்தகம்இனாம்.

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாடு சொற்பொழிவு 0—2—0

4-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை. பின் அவர்கள் என் செய்வார்கள்? தட்டித் திறக்கப்படும் இடத்திலும் கேட்டுக் கொடுக்கப்படும் இடத்திலும் சரண் புகவேண்டியவர்களாகி விட்டார்கள். இவ்விஷயத்தில் அவர்களைக் குறை கூறவோ அவர்களைக் குறை கூறவோ அவர்களை ஆதரிப்பவர்கள் மேல் சிறி விழவோ சிறிதும் காரணமில்லை. காரணங் காட்டி சழக்காடுவோர். கல்வியறிவில்லாக் கசடர்களே யாவர். கோடிக் கணக்கான இளம் பெண்களை இரத்தக்கண்ணீர் வடிக்கச் செய்து விதவை தன்மையால் வதைக்கப்படும் இந்து மதம். பலகோடிக்கணக்கான சகோதர சகோதரிகளை தீண்டாமையென்னும் கொடும் பேயால் கொடுமைப்படுத்தும் இந்துமதம் வீழ்ச்சியுறாது வளர்ச்சியுறுவது எவ்வாறு? தீண்டாமையை விடப் பன்மடங்கு கொடியது விதவைத்தன்மையென்றே சொல்லுவேன். ஆனல் தீண்டாமையால் துன்புறும் சகோதரர்கள் விதவைத்தன்மையைவிட ஆயிரமடங்கு கொடிது தீண்டாமை யென்றே கூறுவார்கள். உற்று நோக்கினல் ஒன்றுக்கொன்று "உனக்கு நான் இளைத்தவனு? எனக்கு நீ இளைத்தவனு? என்று தான் இருக்கின்றது. இருந்தாலும் விதவைத்தன்மை அம்மவோ? அதைவிரிக்கவே வேண்டாம்! நினைத்தாலே நெஞ்சம் குமுருகின்றது. ஐயோ? எட்டி நின்று பார்க்கும், கேட்கும் நமக்கே இவ்வண்ணமிருக்குமானல், இனி அதை அனுபவிக்கும் சகோதரிகளுக்கு எவ்வாறிருக்கும். அம்மம்மா இன்னும் அவர்களுக்கேற்படுத்தப்பட்டிருக்கும் கொடுமைகள் ஒவ்வொன்றையும் விளக்கிக்கொண்டே போனல் அது ஒரு இராமாயணமாயும் முடியும். பாரதமாயும் விரியும் இந்த விதவைத்தன்மை ஒழிவது, என்போன்றோர்கள் பத்திரிகைகளில் எழுதிவிடுவதினலோ மற்றவர்கள் மேடைமேல் பேசிவிடுவதினலோ, அல்ல. பட்டுக்கோட்டை மரகதவல்லியார். கோபி திரு. தாயம்மாள் போன்ற வீரப் பெண்மணிகளும் சகோதரர் முருகப்பர், சகோதரர் சித்தோடு கிருஷ்ணசாமி போன்ற தீரப்புருஷர்களும் வீரமாய் முன் வரவேண்டும். அவர்களைக்கண்டு தான் விதவைத்தன்மை நடுங்கி நாசமுறும். ஆனல் முக்கியமாக சௌராஷ்டிர வகுப்பிலேயே முற்கூறப்பட்டவர்கள் போல் முதலில் முன்வரவேண்டும் அவ்வகுப்பிலுள்ள பெண்கள் நிலை அந்தோ? பரிதாபம்! பரிதாபம்!! சௌராஷ்டிர வகுப்பிலுள்ள எந்தப் புண்ணியவான் இக்காரியத்தை மேற்கொள்வாரோ? எந்த புத்திமான் அத்திருப்பணியில் அஞ்சாமல் இறங்குவாரோ? எந்தக்கல்விமான் கண்மணிகளன்ன பெண்மணிகளின் கண்ணீர் வெள்ளத்திற்கு அணை போடுவாரோ? யான் அறியேன். தெரியேன். முடிவாக இந்து மத அபிமானிகளுக்கு ஒன்று கூறுகின்றேன். இந்த இந்து மதம் நிலைபெற்றிருக்கவேண்டுமானல் தீண்டாமையை யகற்றி விதவைகள் துயரை வேரோடுகளையுங்கள். அன்னிய மதவளர்ச்சியைக்கண்டு வீணே ஆத்திரப்படுவதில் யாது பயன்? இந்துமத ஒடுக்கத்தின் காரணத்தை உள்ளமறிய உணர்ந்திருந்தும் இன்னும் அதை அடியோடு களைந்து அப்புறப்படுத்தாமல் கையெடுத்துக் கும்பிட்டதற்குக் காவல் தண்டனையும் அன்புடன் சென்று கடவுளை வணங்கியதற்கு அபராதமும் அளித்து வருகிறோம். இனியும் இவ்வநாசாரங்களையெல்லாம் இந்து மதத்தினின்றும் அப்புறப்படுத்தி அதைத் தூய்மையாக்காவிடின் இந்து மதம் முற்றும் அழிவது உறுதி! உறுதி;;

## விமோசனத்தின் வீண் புரளி

ஆ. ச. எழுதுகிறார்.

பூரண மது விலக்குத்திட்டத்தை உடனே நிறைவேற்றி விடவில்லையென்று "விமோசனம்" பத்திரிகை அடிக்கடி கவர்ன்மெண்டைத் தாக்கி எழுதுகிறது. ஒரு ராஜாங்கத்தில்சில முறைகளை அனுசரிப்பதானல் முதலில் அதற்கு வேண்டிய ஆரம்ப வேலைகளைச் செய்யவேண்டும் இதுகாரும் பல ராஜீயக்கட்சிகள் எல்லாம் மதுவிலக்கு வேண்டு மென்றுதான் சொல்லியிருக்கிறது. காங்கிரஸ் மட்டும் சொல்லவில்லை இப்படி ஒரு முகமாய் மதுவிலக்கில் எல்லோரும் ஒரே அபிப்பிராயம் கூறவும் கவர்ன்மெண்டாரும் இப்போது தான் ஒரு படி இறங்கிமுதலில்பிரசாரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் பலனுக இப்போதே சில கடைகள் வியாபாரம் குறைந்தும், இஜாராதாரர்கள் திகிலடைந்துமிருக்கிறார்கள் இப்பிரசாரம்இப்படியே நடந்து 2, 3, வருடம் பொருத்துப் பார்த்தால் பலன் ஏறபடுமே தவிரபலனில்லாமற்போகாது. கவர்ன்மெண்டும் கலால் இலாகா வரும்படிக்கு சீட்டு கொடுத்துவிட்டு அதற்கு பதில் வேறு வரும்படியைத் தேடுவதோ அல்லது கவர்ன்மெண்டு செலவில் சிக்கனப்படுத்தக் கூடிய செலவினங்களை குறைத்துக் கொள்வதோ போன்ற நிலைமைக்குத்தான் வரவேண்டும்.

பூரண மதுவிலக்குச் சட்டங்களையெல்லாம் கடிதத்தில் எழுதி மகிழ்ச்சி யடைந்த திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் சென்ற சட்ட சபை எலக்ஷன் காலத்தில் பூரண மது விலக்கு திட்டத்தை ஆதரிப்பவர்களுக்கே ஓட்டு கொடுக்கும்படி கோடு கட்டி, 'சுதேசமித்திரனில்" குறள் எழுதிவந்தார் அந்த எலக்ஷனில்ஜஸ்டிஸ்கட்சி தலை சாய்ந்து பெரும்பாலும் காங்கிரஸ் தேசிய வாதிகளே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அச்சமயம் மது மந்திரியும் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு பெற்றே மந்திரியானர். அப்போது இந்த ராஜகோபாலாச்சாரியார் அவர்களை யெல்லாம் கொண்டு இவருடைய பூரணமது விலக்கு திட்டத்தை நிறைவேற்றுமல் இரண்டு மூன்றுண்டுகளாக மவுனஞ் சாதித்து விட்டு மறுபடி மதுவிலக்குப் போரை தலைமேல்போட்டுக்கொண்டு மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்யும் காரணம் என்ன? "அவர்கள் பூரண மதுவிலக்குக்கு ஆதரவில்லை, "இவர்கள் மதுவிலக்குத் திட்டத்தை ஆதரிக்காமல் மிதக்குடி வேண்டுமென்கிறார்கள். என்றுபழி சுமத்தி தனக்கு வேண்டியவர்களை சட்ட சபை, ஜில்லாபோர்டுகளில் தள்ளுவதற்குச் செய்யும் சூழ்ச்சியா? அதைத்தான் அவர் தன் சகாக்களிடம் கையெழுத்து வாங்கிய மனுக்களில் காட்டப்பட்டிருக்கிறது.

தற்போது கலால் இலாகா மந்திரியாகவுற்ற கனம் முத்தையா முதலியார் அவர்கள் காலத்தில் இத்தகைய மதுவிலக்குப் பிரசாரம் ஏற்பட்டது. எவ்வளவு பெரும் புண்ணியமான வேலை. எத்தனையோ வழிகளில் கவர்ன்மென்ட் செலவழிப்பதில் இத்துறையில் சில லக்ஷம் செலவு செய்ய முயற்சி யெடுத்துக்கொண்ட மேற்படி மந்திரியாரவர்களை இந்திய நாடு வாழ்த்தவேண்டுமல்லவா? இதை என் தேர்தல் பிரசாரமென்று குறை கூறுவது. தேசாபிமானம் இல்லாததும் மதுக்குடி விளம்பரத்தை ப்போட்டுக்கொண்டு பணம் சம்பாதிப்பதுமான பத்திரிகைகளின் செயல் போன்றது என்றே இவரது மனுச் செயலையும் கூறவேண்டி இருக்கின்றது. அவ்வாறே விமோசனம் பத்திரிகை கவர்ன்மென்ட் செய்யும்மதுவிலக்குப் பிரசாரத்தை மறை முகமாகத் தாக்கியும்; அவ்வழியில் பாடுபடுபவர்கள் ஊழியம் வேறுவிதமாயிருப்பதாயும் ஜாடை காட்டி எழுதுகிறது; மதுவிலக்கு. என்றால் எல்லாப் பிரசாரமும் ஒரே பிரசாரந்தான். இனியேனும் விமோசனம்" நடு நிலைமை நின்று எழுதி வரவேண்டுமென வேண்டிக் கொள்ளுகிறேனென ஓர் மதுவிலக்குத் தொண்டர் எழுதுகிறார்.

## வாக்கிலும் சம உரிமை

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்;!

என்று நம் பொய்யில் புலவரருளியதை நன்குணராது தொழில் பற்றி பல சாதிப் பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டு ஒற்றுமையின்றி நாம் வாழ்ந்து வருவதை அறிஞர் பலர் பல துறைகளிலும் சீர்திருத்தி ஒற்றுமையை நிலை நாட்டி வருகின்றனரென்பது யாவரும் நன்கறிந்த விஷயமே. அவ்விதம் பொது நலத்திற்காகப் பாடுபட்டு வரும் அறிஞர் பலரும் மனம், வாக்கு, காயம், என்ற மூன்றில் மனம் காயம் என்ற இரண்டிலுமுள்ள உயர்வு தாழ்வை நீக்க முயற்சி செய்து வருவது போல [வாக்கு] சொல்லளவிலும் சம வுரிமையுடன் அதாவது தன்னிலை, முன்னிலை, படர்க்கையிடங்களைப் பற்றிப் பேசும் போது அனேகமாய் மாற்ற மொழிகளில்லாமல் ஆங்கிலத்தில் மட்டும் முன்னிலை ஒருமை உயர் திணைக்கு [தமிழில் நீ, நீர், நீங்கள் என்ற மூன்று சொற்களுக்கும் ஒரே பதமாக யூ என்றும், படர்க்கை ஒருமை உயர் திணைக்கு [தமிழில் அவன், அவர், உபசாரத்தால், அவர்கள், என்ற மூன்று சொற்களுக்கும் ஒரே பதமாக] ஹீ என்றும் அமைந்திருப்பது போல் ஒருவரோடொருவர் உரையாடும்போது முன்னிலை பாடத்துக்கு இப்போது உபயோகித்து வரும் பதங்களில் நீ, நீங்கள் என்ற பதங்களை நீக்கி நீர் என்ற மொத்தமான சொல்லையும். படர்க்கையிடத்துக்கு அவன் அவர்கள் என்ற பதத்தையும் உபயோகிக்க வேண்டு மென்பதையும் வற்புறுத்திக் கூறி வருவார்களாயின் ஒற்றுமை யென்பது பொது மக்களிடம் அதி சீக்கிரத்தில் வேரூன்றி விடுமென்பதையும் பின் எக்காலத்திலும் எக் காரணத்தை யிட்டும் மாறாது என்பதையும் சிறிது கவனிப்பார்களாக.

நிற்க, மேற்கண்ட விதமாக ஒருவரோடொருவர் உரையாடுவதாயின் தகப்பன். தனயன், தமையன்-தம்பி குரு-மாணக்கன் எஜமானன்-வேலைக்காரன், அரசன்-குடிகள், என்ற பேதமின்றியே இருக்கவேண்டு மென்பதையும் அவ்விதம் வழக்கத்திற்கொண்டுவருவது முடியாத காரியமென்றும் அறிஞர் பலரும் கருதக் கூடுமாயினும் உயர்வு, தாழ்வு என்பதை மனத்தாலும் நினையாமல் காயத்தாலும் பாராட்டிக் கொள்ளாமல் சமவுணர்ச்சியுடன் ஆலயப் பிரவேசம், கலப்பு விவாகம் போன்ற துறைகளில் பொது மக்களின் ஆதரவைப் பெற்ற ஒற்றுமை தழைக்கச் செய்யும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த அறிஞர்களுக்கு சொல்லளவில் சமவுணர்ச்சியைப் பொது மக்களிடம் பரப்புவதெளிது என்பதே பேரறிஞர் துணிபு.

புலவர்களால் கவிகளில் எடுத்தாளும் பதகுருக்கும் பதங்கள் பெரும்பான்மை நீ, அவன் என்றவைகளேயாயினும் இப்போது உலக வழக்கில் இருக்கும் பதங்கள் மூன்றினுள் மேலே காட்டிய நடு பதத்தையே நாம் கொள்வது நல மென்றெண்ணுகிறேன். நமது விருப்பம் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இச் சிறு கட்டுரையை முடிக்கிறேன்.

சொக்கலிங்கம்,
176 கீர். செட்டித் தெரு, கொழும்பு

## பெரியகுளம் முனிசிபாலிட்டி

உயர்திரு தொட்டநாயக்கனூர் ஜெமீன்தார் லெப்டினெண்ட் நாகம் ராமபத்திர நாயுடுகாரு பெரிய குளம் முனிசிபல் சேர்மனுக தெரிந்தெடுக்கப்பட்டார் என்பது கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

3ம் பக்கத் தொடர்ச்

பூதலிங்கங்களாகவும் காட்டிக்கொண்டிருக்கும் சிவலிங்கம் பிண்டலிங்கமான தாழ்த்தப்பட்டவர்களின் உடலாலும் ஆன்ம லிங்கமான அவர்கள் உயிராலும் எப்படிப்பாதிக்கப்படும்? எதனல் தீட்டை உண்டுபண்ணுகிறது? அதன் சைதன்னியம் எப்படிக் குறைவுபடும்? பிராயச்சித்த அவசியத்தின் காலம் எதனல் உணர்த்தப்படுகிறது என்பதை சைவப்பண்டிதர்களும் சைவசமையப்பெரியார்களும் எங்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்.

மூலஸ்தானத்திலிருக்கும் அவ்வியக்த்த'லிங்கம்ஆறுக்கும் கண்டு பிடிக்க முடியாதது. பக்தர்களுக்கேகண்டு பிடிக்கக்கூடியது. ஆத்ம குணங்களாகிய சமம், விசாரம். சந்தோஷம், சாது சங்கம் இவைகளால் அறியாமல் இவைகளாலுண்டாகும் சுத்தமனதால் ஒன்றுபட்ட தன்மையை உணர்ந்தபின் தெரியக்கூடியது. இந்த லிங்கத்தை ஒருவன் பேரிலுள்ள ஒரு தீட்டு கண்டுபிடித்து பின்னப்படுத்திவிடுமானல் அத்தீட்டின் சக்திதானென்னே? லிங்கத்தில் தோன்றியிருக்கும் சிவ சக்தியைவிட தீட்டின் சக்தி பெரிதாகவிருக்குமா? மூலஸ்தானத்தில் முகம் கணகளுடன் பொருந்தியிருக்கும் வியக்த்தாவியக்த லிங்கத்தின் முகம கருணையையும் கண்களிரண்டும் சூரியசந்திரர்களையும் குறிக்குமென்று சொல்லுகிறோம். கருணையோடு கூடிய முகத்தோடிருக்கும்வியக்த்தாவியதத லிங்கத்தின் கருணையானது தீட்டைப்போக்க வேண்டும், அப்படியல்லாமல் ஒருவன்பேரிலுள்ள தீட்டுஅந்த லிஙகத்தின் கருணையைத் தீண்டிவிடுமென்று சொன்னல் அது பொருந்துமா? சிவத்தின் கருணையைவிட தீட்டின் சைதன்னியம் பெரிதா? ஞானிகள் விழிபட ஓடும் வினை என்பதை நாம் ஒத்துக்கொள்ளவில்லையா? ஞானிகள் விழியைவிட டெருமைபொருந்திய சிவத்தின் கருணையாம் முகத்திற்குத்தீட்டுப்படாமலிருக்கப்பார்ப்பாரின் பந்திதான் மருந்தோ? மாயாசம்பந்தமான ப்பிரபஞ்சத்தோற்றத்தின் இருளைப் போக்கி முத்தியென்னும் ஞான ஒழியை உண்டுபண்ணும் அந்த சிவத்தின் கருணை ஒருவன் மேல்அழுக்கின் தீட்டால் இருளடையும் எனறு சொல்லுவது அசம்பாவிதமல்லவா? அந்த சிவலிங்கத்தின் கண்கள் சூரிய சந்திரர்களாகவிருக்கையில் அதில் தீட்டு எப்படிப்பற்றும்? முக்தர்களிடம் விளங்கும் சதாசிவ லிங்கம் மும்மலங்களையும் அதன் தீட்டுகளையும் நீக்குவதால் பெருமைவாய்ந்தது. மும்மலஙகளான அழுக்கை ஜீரணம் பண்ணிக்கொண்டிருக்கும் சிவலிங்கம் ஒரு தேகத்திலுள்ள அழுக்கால் அஜீரணம் எப்படி அடையும்? பூமிக்கு அழுக்கு எருவாகும். அழுக்கு தண்ணீரால் கழுவப்படும். அக்கினிஅழுக்கை எரித்து தாஞக்கிக்கொள்ளும். காற்று அழுக்கை சுததிகரிக்கும். ஆகாயம் அழுகதை அடக்கிவிடும். ஆகவே பஞ்சபூதங்கள் தீட்டைச் சுத்திகரித்து விடுகின்றன. பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்கள் தீட்டைத் தீர்க்கின்றன. அந்தப் பஞ்ச பூதங்களைத் தனித்தனி லிங்கங்களாகக் காட்டி அதில் சிவமிருந்து சிவலிஙக மாக விளங்கும் காஞ்சீபுரம், திருவானைக்காவல், திருவண்ணாமலை, ஸ்ரீகாளாத்தி, சிதம்பரம் இவ்விடங்களிலுள்ள சிவலிங்கங்கள் தீட்டால் எப்படிப் பாதிக்கப்படுகின்றன? அந்தத் தீட்டுதான் என்ன? எப்பொருளால் லிங்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறதோ அப்பொருளுக்குத் தீட்டில்லை. அதில் கண்ட குறிக்கும் காணும் குறிக்கும் தீட்டில்லை. அதனல் காட்டப்பட்டிருக்கும் பஞ்சபூதங்களுக்குத் தீட்டில்லை. அதைப் பார்க்கும் மனதிற்கும் பற்றும் உயிருக்குத்தீட்டில்லை. இத்தனைக்கும்மேலாய் அதிலிருக்கப்பட்ட சிவத்திற்குத் தீட்டில்லை பின்னெதற்குத்தான் தீட்டு? பார்ப்பான் வயிற்றிற்கும் உயர்ந்த ஜாதி என்னும் சைவ இருமாப்பிற்குமா தீட்டு? இவைகளையெல்லாம் சிவத்தால், லிங்கத்தால், சைவசமயத்தால், நூலின் உண்மையால், தெய்வவிதியின் சத்தியத்தால் பண்டிதத்திறமையும், சைவசமய ஆராய்ச்சியும் அறிவுப் பெருக்கமும் இல்லையென்று எங்களைச்சொல்லுகிறவர்கள் எங்களுக்கு விபரமாக விளக்கிச்சொல்லுங்கள். தாக்கத்தால் இன்னும் பல அசம்பாவிதஙகளை உண்டு பண்ண சுயமரியாதைச் சங்கம் வந்ததுமல்ல. உங்களுக்கும் எங்களுக்கும் உலகத்திற்கும் முன்னல் நிற்கும் நமது சமயக்கொடுமைகளை நீக்குவதற்கு எல்லோரும் ஒன்று சேருவோமென்று சமய வாதிகளைக்கேட்டுக் கொள்ளுவதே அவாகள் வேலை.

சைவப் பணமிருக்க, அதை அனுபவிக்கும் மடாதிபதிகளிருக்க, சந்தான குரவர்களின் வாரசுகளிருக்க, சைவபண்டிதர்களிருக்க, சுயமரியாதைச் சங்கத்தைக் குற்றம சொல்லிவிட்டால் சைவசமய உண்மை விளஙகி விடுமென்று நினைக்கும் சைவ சபைத் தலைவர்களின் பிரசங்க மிருக்க, அதைக்கூட்டிச்சேர்த்துஅழுத்தம் திருத்தமாக அச்சடிக்கும் "நவசக்தி"! ஆசிரியரிருக்க ஆயிரம் பாவம்செய்தாலும் ஆராதனையில் போய்விடுமென்று நினைக்கும் பணக்காரர்களுமிருக்க, அவர்களுக்கு அதையே பினனும் பின்னும உபதேசம் செய்யும் பிரசஙககளிருக்க, கோவில் கட்டி கும்பாவிஷேகம் செயது சிவலிஙக கைஙகரியம் செய்து பாவத்தைப போக்கிக் கொள்ள நாட்டுக்கோட்டை நகரத்தவர்களிருக்க, எநத சமயத்திலுமில்லாத உண்மையை சைவசமயத்தால் கண்டு பிடிக்கலாமென்று சொலலிக் கொள்ளும் பெருமைவாய்ந்த சைவ சமய வாதிகளிருக்க இத்தனை பேர்களிருந்தும் சைவசமய ஒழுக்கஙகளில்லாமல் அதன் சாஸ்திர உண்மைகளை ஒரு சிறிதும் உணராமல் தஙகள் லௌவீகத்திற்கும் சுகத்திற்கும் வேண்டி வழியெல்லாம் தெய்வங்களை உபயோகித்துக்கொண்டு வரும் கோவில் குருக்கள், அர்ச்சகர்கள், பரிசாரகர்கள் ஆகிய இவர்களிடம் கோவில்களை ஒப்படைத்து அவர்கள் செய்யும் சட்டதிட்டங்களுக்கு உடைந்தையாகவிருந்து நம்முடைய பிண்ட லிங்கங்களையும் ஆன்ம லிங்கஙகளையும் கொடுமைப்படுத்தி அதனல் அவர்கள் அன்னிய மதங்களுக்குப்போய் நமக்கு அண்ட லிங்கத்திலுள்ள ஆதிக்கத்தைக் குறைத்து அவ்வியக்த்த லிங்கத்தின் அழிவைத் தேடி உயர்ந்த ஜாதிகள் தன் பிண்ட லிங்கத்தையும் ஆன்ம லிங்கத்தையும் காப்பாற்றிக்கொள்ள அதிகாரிகள் காலில் விழுந்து வரும் நமது அறியாமையையும் ஆலோசனைக்குறைவையும் அசூயைக் குணத்தையும் போக்கிக்கொள்ள வேண்டுமென்றே சுயமரியாதைச் சங்கம் சைவ சமய வாதிகளைக்கேட்டுக் கொள்ள வந்திருக்கிறதேயல்லாமல் சிவ லிங்கத்தின் தத்துவங்களை இழிவு படுத்தவும் சைவசமயத்தவர்களின் மனதைப் புண்படுத்தவும் வந்ததல்ல.

அண்ட லிங்கமே எல்லா வற்றிற்கும் ஆதாரம் அதற்குப் பிண்டலிங்கத்தின் பெருமையும் அதிலுள்ள ஆன்மலிங்கத்தின் செழிப்புமே சிவ லிங்கத்தின் பூரிப்பாகும் என்பதை நமது முன்னேர்கள் கண்டதுபோலவே பிரிட்டிஷ் நாகரீகமும் நமக்குப் பிரத்தியட்சமாகக் காட்டுகிறது. இது சைவசமயவாதிகளால் ஒத்துக்கொள்ளக்கூடியதுதானே. தன் தேகம் வலுவாகவும் உயிர் பெலமாகவும் இருக்கவேண்டுமென்கிற எண்ணம் யாருக்கு முண்டு. அதுபோல தன் கூட்டமும் அவ்வித யிருக்கவேண்டுமென்கிற எண்ணத்திற்கு சமயம் குருக்கே நிற்காது. அதிலும் இந்து சமயமோ சிருஷ்டியிலுள்ள எல்லா உயிரையும் அவ்விதமே நினையென்று சொல்லுகிறது. காலில்லாவிட்டால் தேகவலிவால் என்ன பிரயோஜனம் காலுக்கு வந்த வியாதித் தலைக்கோதோ? காலுக்கு வந்த வியாதியைக் கவனிக்காவிட்டால் தலை மூளையைக் கலக்கி இருதயத்தின் இரத்த ஓட்டததை நிறுததிவிடும். சமயத்தில், அதிகாரத்தில், பணத்தில், பாத்தியதையில், ஸ்தானத்தில், ஆசையில், உண்மையில் அதிகாரமுடையவாகளான சைவர்களெல்லாம் ஒன்றுகூடி அதற்கொரு முடிவு கட்டுங்கள் தரும நீதியிலே உறுதியான நமபிக்கையைச் செலுத்துங்கள். இந்த உலகததின சுகபோகஙகளுக்கு மனுஷிய ஜாதியுடன் நாம் சம நடையாகப் போகவேண்டுமானல் நமது பழய தமிழக் கூட்டமான தாழ்த்தப்பட்டவாகளின் தேகமான பிண்டலிங்கத்தையும் அவர்கள் உயிரான ஆன்ம லிங்கத்தையும் போஷித்தாலல்லாது வேறு எந்த லிங்கத்தாலும் நாம் போஷிக்கப்படமாட்டோம். வேறு எந்த லிஙகங்களும் நமக்கு உதவியாக நிற்கவில்லை யென்பதை இந்து தேசச் சரித்திரம் படித்தவர்களெல்லாம் அறிவார்கள். நமது நாட்டிற்கு வந்த, தாத்தாரி, பிண்டாரி, ஆப்கன், மொகலாய், டச்சு, போர்த்து கேசியர், பிரஞ்சு, இங்லீஷ் முதலியவாகளின் சமதுவத்தால் தாழ்த்தப்பட்டவாகளின பண்ட லிங்கமும அவர்களின் உயிரின் வலுவான ஆன்ம லிங்கமுமே உதவி புரியப்போயிற்று. இடத்தின் அளவிற்கும் என் புத்தியின் ஆலோசனைக்கும் எட்டிய அளவிற்குச சுறுக்கி எழுதினேன்.

## மதக்குறி சுகாதாரக் குறியா?

[ஜவுளி கே. ராமையா வரைவது.]

இந் நாட்டில் சுயமரியாதைக் காரர்களென்று வாயளவில் உரைத்து தன் நலங் கருதும் தனவான்களில் மதப்பித்தும் குறிப் பித்தும் பிடித்த கனவான்களும் சிலர் உண்டு. இவர்கள் நாட்டில் சுயமரியாதை என்று சொல்லிக்கொண்டு வெளி மயக்காய் மக்களை ஏமாற்றுகிறவர்களாவார்கள.

"பல்குழுவும் பாழ்செய்யுமுட்பகையும் வேந்தலைக்குங் கொல்குறும்பு மில்லது நாடு" என்பதற் கிணஙக திருமண். திருநீறு, சந்தனம். குஙகுமம், சாநது, கருமை; வெண்மை, புருமை கிரீன்மை, பண்டாரம் என்னும் பலவித குறிப்பித்து பிடித்த மாந்தர்கள் கூட்டமும் பகையும் குறும்பு கொலைத தொழிலும் இல்லாத ஒரு நாட்டை நாம் சுயமரியாதை நாடென்று சொல்ல முன் வருவதற்குத் தடையுண்டோ? நமது நாட்டில் இப்போது மதக் குறிகளைக் காப்பாற்ற புரப்பட்டவர்கள் சுகாதாரத்தையும் வைதீகத்தையும் சாக்காட்டுகிருர்கள். குறிகளினல் வியாதி மனிதர்களுக்கு மற்ற ஜீவாத்மாக்களுக்கும் வருவதில்லை என்ருல் நமது நாட்டிலுள்ள வைத்திய சாலைகளும் சிகிட்சையாளர்களும வேண்டுவதில்லை யென்பது நிட்சயம் அவர்களுக்குச் செலவாகும். கோடிக்கணக்கான ரூபாய்களும் அன்னிய நாட்டுக்கார்ரர்கள் அடித்துக்கொண்டு போகப் மாட்டார்களென்பது திண்ணம். பலவித குறிகளை யணிபவாகளைப் பார்க்கினும் எவ்வித குறியுமின்றிகளங்கம் இல்லாத நெற்றியை உடைய புத்தர்கள், கிறிஸ்தவாகள், முகம்மதியாகள் முதலிய பல் வேறு துரையாளாகளாகிய 140 கோடி மக்கள் நீண்டகாலம் ஜீவித்தும் திரவிய சம்பந்தர்களாகவே இருக்கிறதையும் பார்க்கிறோம்.

பகுத்தறிவில்லாமல், மதக் குறியணியும் மாந்தர்கள் சுயமரியாதைக் கொள்கைக்கு தகுதி யுடையவர்கள் எனறு சொல்ல எந்த அறிவாளிகளும் முன் வரமாட்டாாகள் என்பதற்குச சந்தேகமில்லை.

இவைகளெல்லாம் மக்களை யேய்க்கும் பொய்க்குறி என்பது நிச்சயம். பகுத்தறிவிலலா மக்களிடை சுகாதாரம் சுகாதாரம் என்று வாய்பறையடிககாமல் பகுத்தறிவை அன்னவர்களுக்கும் புகட்டி எவ்வித மதக் குறியையும் அணியாமல் செய்து தாங்களும் சுகாதாரம் எனறு சொல்லும் குறிகளையும உதறித தள்ளி. எக் குறியும் இல்லாமல் தத்தமக்குரிய பகுத்தறிவுக் குறயை வளாத்தி சுயமரியாதையுடன வாழ முன் வருவீாகளாக.

## குமரன் பிரைஸ் சீட்டு.

### குமரன் சந்தாதாருக்கு 500 ரூபாய் இனாம்

—0—

நாளிது தை 10 உ முதல் பங்குனி 30 உ வரை சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருக்குக் குறையாமல் சேரக்கூடுமென் றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐநூறு சந்தாதாரிடம் வரும் வாகும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | பிரைஸ் | ரூ. | 100 |
| இரண்டாவது | ,, | ,, | 50 |
| மூன்றாவது | ,, | ,, | 25 |
| நான்காவது | ,, | ,, | 15 |
| ஐந்தாவது | ,, | ,, | 10 |
| 6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60. | | ,, | 300 |

நிபந்தனைகள்.

1. சுக்ல-ஞு பங்குனி-மீ 30-உக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.
2. சுக்ல-ஞு தை-மீ 10-உ யிலிருந்து மேற்படி ஞு பங்குனி 30-உ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தாதார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினால் சேர்த்துக் கொள்ளப் பெறமாட்டார்.
3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.
4. பிரமோதூத-ஞு சித்திரை-மீ 1-உ குமரனாபீசில் ஐந்து பிரமுகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.
5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷன் கழித்தும் பாக்கி நேரே அனுப்பிவிடப்படும்.
6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.
7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.
8. புதிதாகச் சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணவு அதிகப் படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணவு குறைக்கப் படும். எப்படியானாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.
8. பிரைஸ் பெற்றவர் விபரம் சித்திரை மாத முதல் வாரக் குமரனில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.



### குமரன் வாரப் பதிப்பு சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு | ரூ. | 5—0—0 |
| வெளி நாட்டுக்கு | ,, | 6—0—0 |
| ஜீவிய சந்தா | ,, | 100—0—0 |



## குமரன் டைரி.

(பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமனாதபுரம் ஜில்லா)



## குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | 0—4—0 |
| ஞான சூரியன் | ... 0—4—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| மனு நீதி மருமம் | ... 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | ... 0—2—0 |
| திருகுறள் | ... 0—8—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு | ... 0—2—0 |

8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு



இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரம் அதன் அநுபோகப்பயிற்சிமுறையும்



விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை



## ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்

எங்களிடம் கோடையின் வெப்பத்தை தணித்து குளிர்ச்சியை உடனே கொடுக்கக் கூடிய அருமையான மூலிகைகள் சேர்ந்த சந்தனாதி தைலம் கூந்தலை கருநிறமாக்கி பள பளப்புடன் வளரச் செய்வதற்கு அறைக்கீரை விதைத்தைலமும் இன்னும் மணம் வாசனை சாமான்களும் குல்கந்து பல காய் கறி ஊர்காய்களும் கிடைக்கும்.

சந்தனாதி தைலம் டின் 24 ரூபாய் எடை உள்ளது ரூ. 1—0—0
அறைக்கீரை தைலம் டி. எடை 1—2—0
கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்

ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்
வலங்கை மான் (Vis) கும்பகோணம்.



## முன்னேற்றம்.

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4—0—0 அல்லது ஷி. 2—25

விலாசம்:— மானேஜர்,
"முன்னேற்றம்"
எப்] 155, சிலிசிரோட், சிங்கப்பூர்.



## மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. எ. அப்பாமுத்து.
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

குணம் இல்லையாகில் பணம் வாபீஸ்.

தேகாரோக்கியம்.

# வைத்தியர்க்கு மேலானது!

## நாராயண சஞ்சீவி லேகியமும்

அயத்தங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி, சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினால் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபகசக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் „ „ „ „ 2-ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்:—பச்சிலை மூலிகைகளாலும் பசும் பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருட காலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராக்ஷைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினால் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற „ | ...ரூ. | 3,56,05,275, |
| வசூலான „ | ...ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

நிமிஷநேரத்தில் குணமடையாததைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! முறை—சாதனை செய ஆச்சரிய நிவர்த்தி!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி நிவர்த்தியுடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருவேங்கடம் மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.
உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலையம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கடவுள் கடவுளென காசைத் தொலைக்காதே

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.